
Not for sale

ஜூலை - ஆகஸ்டு 2015

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom




# வேதாகமத்தில் காணப்படும் சுதந்தரம்

கனத்தினாலும் மகிமையினாலும் முடிசூட்டப்படுதல் • ஒரு வாக்குத்தத்தத்தின் மூலம் அளிக்கப்பட்டது

அவருடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பாரம்பரிய சொத்து

முழங்கால்கள் யாவும் முடங்கும் • மகிமைக்கும், ஊழியத்திற்கும் அழைக்கப்படுதல்

இவர்கள் என் ஜனங்கள் • ஜீவ தண்ணீரை இலவசமாக அவன் பெறக்கடவன்

தேவனுடைய சுதந்தரம்

**வேதாகமத்தில் காணப்படும் சுதந்தரம்**

# ஆதியிலே




சொந்தமாக்கிக்கொள்வது அல்லது பெற்றுக்கொள்வது, விசேஷமான ஒரு உரிமை அல்லது **தெய்வீக பங்கு**. "என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது,... நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் **சுதந்தரித்துக்**கொள்ளுவான்" (மத்தேயு 19:29).

அறிவுள்ள அவருடைய சிருஷ்டிகளுக்கானாலும், சரி, தனக்கானாலும் சரி, தேவன் தம்முடைய யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்தின் வழியாகக்கொடுக்கக்கூடிய எல்லா உடமைகளையும், "சுதந்தரம்" என்று நாம் கருதலாம். ஜீவனுக்குரிய எந்நிலையானாலும் சரி - பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய மற்றும் தேவனோடுகொள்ளும் எந்தவிதமான ஐக்கியமும், ஒருவருடைய சுதந்தரமாக உள்ளது.

தேவன் அளித்த பல்வேறு சுதந்தரங்களை இந்த ஹெரால்டு பிரதி, வசனக் குறிப்புகளோடு சுட்டிக்காட்டுகிறது. இந்தச் சுதந்தரங்களை ஒன்று சேர்த்துப்பார்க்கும் போது, தேவனுடைய யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்தின் சாராம்சம் விவரிக்கப்படுகிறது.

நம்முடைய ஆதிபெற்றோர் ஆதாம் மற்றும் ஏவாள் பெற்ற முதல் சுதந்தரத்தையும், கீழ்ப்படியாமையினால் அவர்கள் அதைத் தொலைத்திட்ட விதத்தையும், "கனத்தினாலும், மகிமையினாலும் முடிசூட்டுதல்" என்ற தலைப்பு விவரிக்கிறது. "ஒரு வாக்குத்தத்தின் மூலம் அளிக்கப்பட்டது" என்ற அடுத்த தலைப்பு, ஆபிரகாமின் கீழ்ப்படிதலுக்கும், விசுவாசத்திற்கும் பரிசாகப் பெற்ற சுதந்தரமான வாக்குத்தத்தத்தை ஆராய்கிறது. இந்த சுதந்தரங்கள், முழு இஸ்ரயேல் ஜனங்களுக்கும், முழு மனுக்குலத்திற்கும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் முக்கிய அம்சங்களைக் காட்டுகிறது.

"அவருடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பாரம்பரிய சொத்து" என்ற தலைப்பு ஆபிரகாம் மற்றும் இஸ்ரயேலர்களின் சந்ததிக்குக் கொடுக்கப்பட்ட சுதந்தரத்தையும், கீழ்ப்படியாமையினால், கால போக்கில் அந்தச் சுதந்தரம் தொலைக்கப்பட்டு, அதை மீண்டும் பெறுவதற்கு அவர்கள் போராடின போராட்டங்களை காண்பிக்கிறது. அடுத்து, "முழங்கால்கள் யாவும் முடங்கும்" என்ற தலைப்பானது தெய்வீக நீதியை திருப்திப்படுத்தி, மனுஷனுடைய பூமிக்குரிய சுதந்தரத்தை திரும்பக்கொடுப்பதற்கு, உத்தரவாதம் அளிக்கக்கூடிய - இயேசு செய்திட்ட வேலைகளையும், அவர் மரண பரியந்தம் விசுவாசத்தைக் காத்துகொண்டதினால் அவர் சொந்தமாகப் பெற்ற சதந்தரத்தையும் ஆராய்கிறது.

இக்காலத்திலும், வருங் காலத்திலும், இயேசுவின் சீஷர்களாகிய சபை, மனுஷனுடைய சுதந்தரத்தைத் திரும்பக்கொடுப்பதற்கு ஒருமித்து இயேசுவோடு எவ்வாறு வேலை செய்வார்கள் என்பதை, "மகிமைக்கும், ஊழியத்திற்கும் அழைக்கப்படுதல்" என்ற தலைப்பு விமர்சிக்கிறது. "இவர்கள் என் ஜனங்கள்" என்ற அடுத்த கட்டுரை புது உடன்படிக்கைக்குக் கீழ் வருங்காலத்தில் இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட சுதந்தரத்தையும், தேவனுடைய ஜனங்களாக மாறுவதன் மூலமாக அந்தச் சுதந்தரம் எப்படியாக பலனளிக்கும் என்றும் காண்பிக்கிறது.

"அவன் ஜீவ தண்ணீரை இலவசமாகப் பெறட்டும்" என்ற தலைப்பு கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில், கிறிஸ்துவும் சபையும் இந்த உலகத்தின் மனுக்குலத்திற்கு அளிக்கப் போகிற சுதந்தரத்தை விவரிக்கிறது. இறுதியாக, தேவனுடைய யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டம் நிறைவு பெற்றபின், நித்தியமான சுதந்தரத்தை அவர் பெற்றுக்கொள்வார் என்பதை, "தேவனுடைய சுதந்தரம்" என்ற தலைப்பு காட்டுகிறது.

தேவன் அவருடைய யுகங்களைக் குறித்த தெய்வீக திட்டத்தின் வழியாக அவருடைய அறிவுள்ள ஜீவிகளுக்கும், அவருக்கும் தேவன் கொடுத்திட்ட அல்லது இனி கொடுக்கப்போகிற சுதந்தரத்தின் ஆழமான கண்ணோட்டத்தை இந்தப் பிரதி அளிக்கிறது.

**ஜுலை / ஆகஸ்ட் 2015**

**கனத்தினாம் மகிமையினாலும் முடிசூட்டப்படுதல்** 37
மனுஷன் ஆதியிலே பெற்ற சுதந்தரம்

**ஒரு வாக்குத்தத்தத்தின் மூலம் அளிக்கப்பட்டது** 41
ஆபிரகாமின் சுதந்தரம்

**அவருடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பாரம்பரிய சொத்து** 45
இஸ்ரயேல் ஆதியிலே பெற்றிருந்த சுதந்தரம்

**முழங்கால்கள் யாவும் முடங்கும்** 50
கிறிஸ்துவின் சுதந்தரம்

**மகிமைக்கும், ஊழியத்திற்கும் அழைக்கப்படுதல்** 54
சபையின் சுதந்தரம்

**இவர்கள் என் ஜனங்கள்** 60
இஸ்ரயேலின் வருங்கால சுதந்தரம்


**ஜீவ தண்ணீரை இலவசமாக அவன் பெறக்கடவன்** 66
மனுஷனுடைய சுதந்தரம் திரும்பக்கொடுக்கப்படுதல்

**தேவனுடைய சுதந்தரம்** 71
தேவன் பெறக்கூடியவைகள்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 75

**ஆதியில் மனிதன் பெற்றிருந்த சுதந்தரம்**

# மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்படுதல்




"நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதியாகமம் 1:28)

**Michael Costelli**

6000 வருடங்களுக்கு முன் மனிதன் சிருஷ்டிக்கப்படுகையில், அவன் தேவனுடைய தாராளமான கொடைகளைச் சுதந்தரித்தார். ஒருவருடைய உடைமைகள் மற்றொருவருக்குச் சொந்தமாகக்கொடுக்கப்படுவதே, சுதந்தரத்தின் பொருள் என்று ஆக்ஸ்ஃபோர்டு அகராதி கூறுகிறது. தேவனுடைய சிருஷ்டிப்பின் வழியாக, மனுஷன் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டு, பரலோக தந்தையிடமிருந்து பரிபூரணமான மனுஷ ஜீவன், ஒரு தோட்டமாகிய வீடு மற்றும் தேவன் சிருஷ்டித்த பூமியின்மேல் ஆளுகையையும் சுதந்தரமாகப் பெற்றார்.

"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக...தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று" என்று ஆதியாகமம் 1:26-28, 31-ஆம் வசனங்களில் வாசிக்கிறோம்.

### மனுஷனுக்கு ஆளுகை கொடுக்கப்பட்டது

மனுஷனுக்கு ஜீவனை மட்டும் வாக்களிக்காமல், தேவனுடைய இயற்கையான சுற்றுப்புறம் மற்றும் மிருகங்களின்மேலும் ஆளுகையை அளித்தார். ஆனால் இவர்கள் ஒருவர்மேல் ஒருவருக்கு ஆட்சி செய்ய அந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இந்தப் பூமியின்மேல் ஆளுகையையும், அதிகாரத்தையும் பெற்றதினால் மனுஷன் தேவனைப் போலானார்.

யேகோவா தேவன் சர்வத்திற்கும் ஆட்சியாளராக இருப்பதைப்போல, பூமிக்குரிய சகலத்திற்கும் மனுஷன் ஆட்சியாளரானார் - "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்" (ஆதியாகமம் 1:26). தேவன் தாம் சிருஷ்டித்த மனுஷனை துவக்கத்தில் அங்கீகரிக்காமல், பரிபூரணமாக நிறைவு செய்த பின் அங்கீகரித்தார். இதினிமித்தம் அவர் "சிருஷ்டிப்பை நல்லது" என்று கருதினார் - அதுவே பரிபூரணம். ஏனெனில், தேவனுடைய அறிவுள்ள சிருஷ்டிகளில், அபூரணமானதொன்றும் நல்லதாக இருப்பதில்லை. அவர் சிருஷ்டித்த உலகத்தின்மேல் மனுஷனுக்குக்கொடுத்த தயாளகுணமுள்ள ஆளுகை குறிப்பிடத்தக்கது.

### தூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவராக சிருஷ்டிக்கப்பட்டார்

மேலும் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதனின் நிலையைக்குறித்து சங்கீதம் 8:5-8-ஆம் வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. "நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டுமிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்." தேவனுடைய பிரமாணம் ஆதாமின் இருதயத்தில் எழுதப்பட்டிருந்தது. அவர் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் குணரீதியாகவும், பரிபூரணமாக இருந்தார்.

தூதர்களோடு, ஆதாம் மற்றும் ஏவாளை ஒப்பிட்டுப்பார்க்கும் போது, இவர்களுக்கு சில

கட்டுப்பாடுகள் இருந்ததை, "சற்று சிறியவர்களாக" என்ற வார்த்தைக்குறிப்பிட வேண்டும். தூதர்கள் குறைந்த நேரத்தில் மிகத் தொலைவான தூரத்தைக் கடந்துச் செல்வர். ஆனால் மனுஷனை இயற்கை சூழல்கள் அதிகமாகக் கட்டுப்படுத்திவிடுகிறது. ஆயினும், கிறிஸ்துவின் மணவாட்டியாக மாறி இந்தப் பாவத்தையும் மரணத்தையும் முற்றிலுமாக அகற்றுவதில் ஒரு பங்கைப் பெறுவதற்கு மனுஷனுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. மனுஷனுடைய வீழ்ச்சிக்குப்பின் சாத்தானுக்குக்கொடுக்கப்பட்ட அறிவிப்பில் இதுவும் உள்ளடக்கப்பட்டிருந்தது. "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" (ஆதியாகமம் 3:15).

இந்த உலகம் அஸ்திபாரம் போடப்படுவதற்கு முன் நம்முடைய பரலோக பிதா அவருடைய சிருஷ்டிப்பை மற்றொரு கோணத்தில் விரிவாக் குவதற்கு திட்டமிட்டிருந்தார். "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவான் 4:8) என்பதைப் புரிந்து கொண்டால் மட்டுமே, இந்தச் சிருஷ்டிப்பில் அவருடைய நோக்கத்தைப் புரிந்துகொள்ளலாம். ஏனெனில், அந்த அன்பு கிரியை செய்வதற்கு, அவரைக் கட்டாயப்படுத்தியது. பல பெற்றோர் களையும் இதே நோக்கம் ஒரு குடும்பமாக இருப்பதற்கு ஊக்குவித்திருக்கிறது. தீமையின் அனுமதியின் மூலமாக நம்முடைய பரலோக தந்தை புரிந்துகொண்டதைப் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளைக்கொண்டு ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்கிறார்கள். ஒரு பிள்ளையை நல்லமுறையில் வளர்ப்பதற்கு, அதிகமான பொறுமையும் புரிந்துகொள்ளுதலும் தேவைப்படுகிறது.

பாவம் செய்வதற்கு முன், மனுஷன் தன்னுடைய சிருஷ்டிகரோடும், தேவன் அவர் ஆளுகைக்குக் கீழ்ப்படுத்தியிருந்த மிருகங் களோடும், ஒரு பரிபூரண தொடர்பைக் கொண்டிருந்தார். அனைத்து மிருகங்களுக்கும் பெயரிடும் பொறுப்பு ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டது (ஆதியாகமம் 2:20). மிருகங்களுக்குப் பெயரிடும் காரியத்தில் ஒருவர் ஆதாமின் ஆழமாக சிந்திக்கும் திறனை கற்பனை செய்யலாம். இது நட்பையும், புரிந்துகொள்ளுதலிலுள்ள தொடர்பையும் காட்டுகிறது.

மனுஷ சந்ததியை ஈன்றெடுக்கும் திறனை ஆதாமும் ஏவாளும் சுதந்தரித்திருந்தார்கள். இவர்கள், "பலுகி பெருகி பூமியை நிரப்ப ணேடியதாக இருந்தது" (ஆதியாகமம் 1:28). பாவத்தில் விழுந்த பின் இந்த வேலை துவங்கியது என்றும் வசனங்கள் குறிப்பிடுகிறது (ஆதியாகமம் 3:16). ஆதாம் பாவம் செய்தபோது, பாவம் செய்வதற்கு முன் பெற்றிருந்த அறியாமையைத் தொலைத்து, தொடர்ந்து காயீன் ஆபேலுக்கு இடையில் நடந்த தீமைகளையும், அதைத் தொடர்ந்து அவர்களின் சந்ததி பெற்ற வேதனையான பின்விளைவுகளை அறிந்துகொண்டனர்.

### ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படியாமை

ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படியாமையைக்குறித்து ஆதியாகமம் 3:9-11-ஆம் வசனங்களில் வாசிக்கிறோம். "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான். அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்."

தேவன் மற்றும் ஆதாம் இவர்களுக்கு இடையில் நடந்த சம்பாஷணையோடு இதைக்குறித்த காரியம் துவங்கியது. தான் நிர்வாணியாக இருப்பதை அறிந்த ஆதாம், தேவனுடைய பிரசன்னத்தைத் தவிர்த்தார். இதினிமித்தம் ஆதாம், தான் குற்றம் செய்ததை நன்கு அறிந்திருந்தார். ஆதாம், "நிர்வாணியாக" இருப்பதை உணர்ந்து அதனிமித்தம் பயந்து ஒளிந்துக்கொண்டதினிமித்தம், ஆதாம் எங்கிருந்தார் என்று தேவன் அவரிடம் கேட்க வேண்டியதாக இருந்தது. ஆகவே அவர் குற்ற உணர்வோடிருந்தார். விக்கிரகாரதனை பாவத்தினிமித்தம் தேவன் யூதாவை தாழ்த்திட்ட நிலைமையை விவரிப்பதற்கு "நிர்வாணம் " என்ற சொல், 2 நாளாகமம் 28:19-ஆம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதுபோல, ஆதாமின் நிர்வாணம் அவருடைய கீழ்ப்படியாமையின் உண்மையான நிலையை வெளிப்படுத்தியது. தேவனுடைய பிரமாணங்களில் இந்தக் கீழ்ப்படியாமை ஒரு சிறிதான மீறுதல் அல்ல.

இந்தக் காரியத்தைப் பொறுத்தவரையில், ஆதாம் தேவனிடம் கணக்குக்கொடுக்க வேண்டியதாக இருந்தது. அதற்குப் பதில்கூறும் வகையில் ஆதாம் தான் செய்த தவறுக்கு ஏவாளை குற்றம் சாட்டினார். "என்னுடனே இருக்கும்படி தேவரீர்

தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்" (ஆதியாகமம் 3:12). அதைக் கேட்ட தேவன் இதைக்குறித்து ஏவாளிடம் விசாரித்தார். அவள், "சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன்" (ஆதியாகமம் 3:13) என்ற உண்மையைக் கூறினாள். "மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" (1தீமோத்தேயு 2:14) என்று கூறுகிறது. ஏவாள் வஞ்சிக்கப்பட்டதினால், மரண தீர்ப்பு கொடுக்கப்படாமல், ஆதாம் துணிகரமாக தேவனுடைய பிரமாணத்தை மீறினதால் அந்தத் தீர்ப்பு கொடுக்கப்பட்டது.

மீண்டும் தனித்து வாழ்வதை எண்ணி, பயந்ததினால், ஏவாள் தெரிந்துகொண்ட பாதையை ஆதாமும் தெரிந்தெடுத்திருக்கலாம். அவருடைய துணைவியார்மேல் அவர் கொண்டிருந்த அன்பு, இந்தக் கீழ்ப்படியாமைக்குள் அவரை வழி நடத்தியிருக்க வேண்டும். காரணம் என்னவாக இருந்தாலும் சரி, முழு மனுக்குலமும் பாவம் மற்றும் மரணத்தின் தீர்ப்பை அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. நாம் பிறக்கும்போதே, ஆதாமின் ஆதி பாவங்களை நம்முடைய மரபணுக்களில் சுதந்தரித்துக்கொண்டோம். "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங்கீதம் 51:5) என்று சங்கீதக்காரர் கூறுகிறார்.

### கீழ்ப்படியாமையின் பின் விளைவுகள்

பாவத்தின் விளைவினால், மனுஷன் தன் சிருஷ்டிகரிடமிருந்தும், தன்னுடைய தந்தையிடமிருந்தும், தன்னுடைய நெருங்கிய நண்பனிடமிருந்தும், விலகிச் செல்ல நேர்ந்தது. ஆனால் ஆதாம் தன்னுடைய சிருஷ்டிகரோடுகொண்டிருந்த நெருங்கிய ஐக்கியத்தினால் பெற்றிருந்த மகிழ்ச்சி முடிவுக்கு வந்தது. நேசிக்கப்பட்டவர்களின் அன்பற்ற வார்த்தைகளினாலும், உணர்வுகளாலும், பிரிந்து, மீண்டும் சில மனவருந்துதல் அல்லது பரிகாரம் செய்யப்பட்டு ஒப்புரவாக்குவதுப் போல இதுவும் நடந்தது. ஆதாமின் விஷயத்தில், சர்ப்பத்தின் தலையை நசுக்கவதற்கு வருங்காலத்தில் குணமளிக்கும் ஒருவர் வருவார் என்று குறிப்பிடப்பட்டது. (ஆதியாகமம் 3:15).

மனித சிருஷ்டிப்போடு, யேகோவா தேவன் அவருடைய நெருங்கிய தொடர்பை தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை, ஏனெனில், பாவம் அதற்குத் தடையாக இருந்தது. ஏதேன் தோட்டத்தில் பரிபூரண நிலையோடு துவங்கப்பட்டவைகள், மனிதனுடைய கீழ்ப்படியாமையினால் தடைபட்டது. பாவத்தில் விழுந்து, சுமார் 6000 வருடங்களுக்கு மேலாக, "நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்; நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்" (சங்கீதம் 104:29). வரக்கூடிய கிறிஸ்துவின் இராஜ்யத்தின் வழியாக, மனுக்குலம் தங்களுடைய ஆதி சுதந்தரத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக ஆயத்தப்படும்படிக்கு, வடிவமைக்கப்பட்ட இந்த காலத்தை, "தீமையின் அனுமதியின்" காலம் என்றும் அழைக்கப்படுகிறது.

### தேவையான பாவத்தின் அனுபவம்

மனுஷன் நித்தியமாக வாழ்ந்து, தன்னை தான் ஆட்சி செய்வதற்கு முன் பாவத்தின் பின்விளைவுகளை அனுபவிப்பது மனுஷனுக்கு அவசியம் என்பதை தேவன் முன்னறிந்தார். "முதலாம் தொகுப்பில்" சகோதரர் ரசல் தேவனுடைய பலவகைப்படும் ஞானத்தைக்குறித்து எழுதியுள்ளார்.

"தேவன் மனிதனை இந்த நன்மை தீமையைப் பற்றி அறிந்து உணர்ந்துகொள்ளும் சக்தி இல்லாமலோ அல்லது நன்மையை மாத்திரம் உணர்ந்துகொள்ளும் சக்தியுடையவராகவோ உருவாக்கியிருக்கக் கூடும். ஆனால், அவ்வாறு படைத்திருந்தாரானால் அவன் ஒரு உயிருள்ள இயந்திரமாய் இருந்திருப்பானே அல்லாமல், சிருஷ்டிகருடைய குணநலன்களுக்கேற்ற சாயலாக இருந்திருக்க முடியாது. அல்லது மனிதனை சுயாதீனமுள்ள பரிபூரண மனிதனாக அவர் சிருஷ்டித்ததுப் போல, சாத்தானுடைய சோதனையிலிருந்தும் பாதுகாத்திருக்க முடியும். அப்படியிருந்ததானால் மனிதனுடைய அனுபவமானது நன்மை செய்கிறவனாகவே அளவிடப்பட்டு, மனிதனுக்கு தீமையினால் வரும் பாவ விளைவுகளின் அனுபவம் ஏற்படாததால், புறம்பே இருந்து வரும் துராலோசனைகளுக்கும், தனக்குள்ளாகவே தோன்றும் ஆசை இச்சைகளுக்கும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு, நித்திய எதிர்கால வாழ்வே எப்போதும் சாத்தியமானதாகிவிடும். அன்றியும், நன்மையின் ஆசீர்வாதங்களை தீமையின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் முன்பு உணர்ந்து போற்ற முடியாது.

"ஆனால், அனுபவ வாயிலாக தீமையைப்பற்றி தெரிந்துகொள்வதைவிட, வேறுவிதத்தில் அதன் அனுபவங்களை அடைய முடியாதா என்ற கேள்வி

எழலாம். காரியங்களை அறிந்துகொள்வதற்கு நான்கு வழிமுறைகள் உண்டு. அவை - இயல்பான உள்ளுணர்வின் மூலம் தன்னில்தானே அறிதல், கவனித்துக் கற்பதன் வாயிலாக, அனுபவங்களின் மூலமாக உண்மை என்று நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ள தகுந்த ஆதாரங்களின் அடிப்படையின் வாயிலாகவும், பெற்றுக்கொள்ளும் செய்திகள் மூலமாக.

முதலாவதாக தன்னில்தானே அறிவது என்பது, இய்பான அறிவின் மூலமாகக் காரணகாரியத்தை ஆராயாமல் , அல்லது எந்த ஒரு ஆதாரமும் தேவையில்லாமல் நேரடியாக அறிந்து உணரக்கூடிய நிலைமையைப்பார்ப்போம். இப்படிப்பட்ட அறிவு எல்லா ஞானத்திற்கும், சத்தியத்திற்கும் நித்திய ஊற்றாயிருக்கிற யேகோவா தேவனுக்கு மட்டுமே உண்டு, இவரே தம் சிருஷ்டிப்புகள் அனைத்துக்கும் உன்னதமான நிலைமையில் இருக்கிறார். ஆகவே, நன்மை தீமையை அறியத்தக்க மனித அறிவானது இயல்பான உள்ளுணர்வினால் அல்ல, கூர்ந்து கவனித்துப்பார்த்து அறிதலின் மூலம் ஒருவேளை மனித அறிவு வளரலாம். ஆனால், அவ்வாறு அறிவதற்குத் தீமையையும் அதனுடைய பலன்களையும் காண்பித்து, மனிதன் கூர்ந்து கவனிக்கும்படி வேறொரு இடத்தில் தீமை அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். வேறு ஏதோ ஒரு இடத்தில் வேறு ஜீவிகளிடத்தில் அனுமதிப்பதற்கு அவசியமானால், ஏன் அதை மனிதரிடத்திலேயே இப்பூமியில் அனுமதிக்கக்கூடாது?" என்று அவர் தொடர்ந்து கூறுகிறார்.

### மனிதனுடைய சுதந்தரம் திரும்பக் கொடுக்கப்படுதல்


தேவன் தம்முடைய அனுபவத்தினால் நன்மை மற்றும் தீமையின் அறிவை மனிதனுக்குக் கற்பிப்பதற்கும், அவனைச் சீர்பொருத்துவதற்கும், அவனுடைய சுதந்தரத்தைத் திரும்பக் கொடுப்பதற்கும், பரிபூரண சுற்றுப்புற சூழ்நிலையை அளிப்பதற்கும் இந்த ஞானமுள்ள, பலனுள்ள ஒரு ஏற்பாட்டை செலாற்றினார். மனிதனுடைய சுதந்தரம் திரும்பக்கொடுக் கப்படுவதற்கும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் படியாக, தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை ஆதாமுக்குப் பதிலாக, **ஈடுபலியாகக்** கொடுத்தார். கிறிஸ்துவின் ஈடுபலியின் மூலமாக கிறிஸ்துவின் இராஜ்யத்தில், சாதகமான சூழ்நிலையின் கீழ் ஒவ்வொரு நபரும் நித்தியமாக ஜீவிப்பதற்கு ஒரு வாய்ப்பளிக்கப்படும். மேலும், இது ஆதாமின் வீடாகிய பரதீசையும், பூமியின்மேல் அவருடைய ஆளுகையையும் திரும்பப் பெற்றுத்தரும்.

"மந்தையின் துருக்கமே, சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்; ராஜரிகம் எருசலேம் குமாரத்தியினிடத்தில் வரும்" (மீகா 4:8) என்று மீகா கூறினார் என்றும், "அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபேசியர் 1:14) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார் என்றும் நம்முடைய ஆண்டவராம் இயேசு சொன்ன உவமையில், (மத் 13:44) அவர் மனுக்குலமாகிய பொக்கிஷத்தை மட்டும் அல்ல, அந்த நிலத்தையும், அதாவது சாபத்திலிருந்த அந்தப் பூமியையும் விலைக்கு வாங்கினார் என்று குறிப்பிடுகிறார்" என்று சகோதரர் ரசல் தன்னுடைய தொகுப்பில் எழுதுகிறார்.

ஆதியில், மனுஷன் பெற்றிருந்த சுதந்தரமான வாழ்க்கை, மகிழ்ச்சி மற்றும் ஆளுகையையும், நம்முடைய ஆண்டவரும்,இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வழியாக, திரும்பக் கொடுக்கப்படும். தேவனுக்கே மகிமை! ஆமேன்.

ஆபிரகாமின் சுதந்தரம்

# ஒரு வாக்குத்தத்தத்தின் மூலம் அளிக்கப்பட்டது




"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்" (எபிரெயர் 11:8).

Kome Ajise

பண்டைய காலத்தில், சுதந்தரம் மிக முக்கியமானதாக இருந்தது. எடுத்துக்காட்டாக, ஆபிரகாமின் சொத்துக்களை தன்னுடைய குமாரனுக்குச் சுதந்தரமாக இருக்க வேண்டும் என்பதினால், சாராள், ஆகார் மற்றும் அவளுடைய குமாரனையும் அனுப்பிவிடும்படிக்கு ஆபிரகாமை வற்புறுத்தினாள். கேத்தூராள் என்ற ஸ்திரீயை ஆபிரகாம் விவாகம் செய்து, ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுத்தாலும், அவருடைய அனைத்து உடைமைகளையும் ஈசாக்குக்குக் கொடுக்கப்பட்டதை ஆதியாகமம் 25: 5-ஆம் வசனம் விவரிக்கிறது. ஆபிரகாமின் மற்ற குமாரர்கள், அவர் உயிரோடிருக்கையில் அவரிடமிருந்து வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் ஆபிரகாம் மரித்தபோது அவருடைய சகல சொத்துக்களுக்கும், அவர் பெற்ற சகலவிதமான வாக்குத்தத்தங்களுக்கும் ஈசாக்கு சுதந்தரவாளியானார்.

### தேவன் ஆபிரகாமை அழைத்தார்

தன்னுடைய குடும்பத்தையும், இனத்தாரையும் விட்டு, ஒரு அந்நிய தேசத்திற்கு வரும்படி தேவன் ஆபிரகாமை அழைத்தார். தேராகு, அவருடைய குமாரனாகிய ஆபிராம், சாராய் மற்றும் லோத்தை கல்தேயாவிலிருக்கும் ஊர் என்ற தேசத்திலிருந்து வெளியே அழைத்துச் சென்று கானான் தேசத்தில் ஆரான் என்ற இடத்தில் தங்கினார்கள் என்று ஆதியாகமம் 1:31-ஆம் வசனம் வெளிப்படுத்துகிறது. ஆரானில் தேவன் ஆபிரகாமைச் சந்தித்து, அவருக்குத் தேவன் கொடுக்கப்போகிற தேசத்தைப் போய்ப்பார்க்கும்படிக் கூறினார். தேராகு ஆரானில் மரித்தப்பின், ஆபிராம் தன்னுடைய மனைவியையும், லோத்தையும் அவர்களுடைய சகல சம்பத்துக்களையும், வீட்டிலுள்ள ஜனங்களையும், கூட்டிக்கொண்டு கானானுக்குப் பயணித்தார்கள் என்று ஆதியாகமம் 12:5-ஆம் வசனம் கூறுகிறது. யேகோவா தேவன் அவர்களுக்காக தேர்ந்தெடுத்துக் கொடுத்த தேசத்தைச் சுற்றிப் பயணித்தார்கள். அப்போது ஒரு பஞ்சத்தில் அவர்கள் பெற்ற கடுமையான அனுபவங்களினால் அந்த காலம் முடியும் வரையில் தென் திசையிலுள்ள எகிப்தில் இவர்கள் காத்திருக்க வேண்டிதாக இருந்தது.

### தேசத்தைச் சுதந்ததரித்தல்

இவர்கள் கானானை நோக்கிப் பயணிக்கும்போது, இந்தத் தேசத்தை ஆபிரகாமின் சந்ததிக்குக்கொடுப்பேன் என்ற வாக்குத்தத்தத்தை தேவன் ஆபிரகாமிடம் ஊறுதியளித்தார் (ஆதியாகமம் 12:7). மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், இந்தத் தேசம் ஆபிரகாமின் சுதந்தரமாக இருந்தது. "கொடு" என்ற எபிரெய வார்த்தைக்கு (ஸ்டிராங்க்ஸ் H5414) "உரிமையாளர் என்ற அதிகாரத்தைக் கொடுப்பது" என்று பொருள் கூறப்படுகிறது. ஆயினும், ஆபிராமின் சந்ததிகளுக்கு இந்த உரிமை வாக்களிக்கப்பட்டாலும், அது "பாரம்பரிய" சொத்தாகவே இருந்தது. இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்ட காலத்தில், கானனியர்கள் அந்தத் தேசத்தில் இருந்ததாக 6ஆம் வசனம் கூறுகிறது. அந்த காலத்தில் அந்தத் தேசத்தை மற்றவர்களும் உரிமை கோரியிருக்கலாம். ஆனால் உரிமையாளராக உண்மையில் அதிகாரம் கொடுக்கக்கூடியவர் யேகோவா தேவனே.

இந்தத் தேசத்தைக்கொடுப்பதற்கு யேகோவா தேவன் மட்டுமே அதிகாரம் பெற்றவர் என்பதை சங்கீதக்காரர் உறுதியளிக்கிறார். "பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது" (சங்கீதம் 24:1). "தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம் " (லேவியராகமம் 25:23) என்கிற வசனமும் யேகோவா தேவனுடைய உரிமைப் பேற்றை உறுதிப்படுத்துகிறது.

"சுதந்தரம்" என்பதற்கான எபிரெய வார்த்தையை (ஸ்டிராங்கஸ் H5159)ஆதியாகமம் 12-ஆம் அதிகாரம் பயன்படுத்தாமல் போனாலும், இந்தத் தேசம் ஆபிரகாமின் சுதந்தரம் என்பதை எபிரெயர் 11:8-10-ஆம் வசனங்கள் உறுதிப்படுத்துகிறது. "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தராகிய

ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்; ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்."

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை ஆபிரகாமுக்குக்கொடுக்க வேண்டும் என்ற தேவனுடைய நோக்கத்தைக்குறித்து மறுப்புச் சொல்ல ஒருவரும் இல்லை. அந்தத் தேசத்தின் எல்லைகளைக்குறித்து விவரிப்பதற்கு யேகோவா தேவன் அதிகக் கவனம் எடுத்துக்கொண்டார். "அந் நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" (ஆதியாகமம் 15:18-21). இந்த நிலப்பரப்பு உடனடியாக ஆபிராமுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே அவருடைய வாழ்நாட்களில் அந்தத் தேசத்தின்மேல் உரிமையையும் அவர் பெறவில்லை. ஆயினும் அவர் முழுமையாக, அவருடைய குமாரனாகிய ஈசாக்குக்குச் சுதந்தரமாகக் கொடுத்தார். அவருடைய சந்ததிகளில் வருங்கால தலைமுறைகள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சுதந்தரத்தை உண்மையில் அனுபவிப்பார்கள்.

**ஈசாக்கின் பிறப்பு**

வாக்களிக்கப்பட்ட சுதந்தரத்தைக்குறித்து, ஒரு முக்கியமான பிரச்சனையை ஆபிரகாம் ஆதியாகமம் 15-ஆம் அதிகாரத்தில் எழுப்பினார். - வாரிசு அற்ற நிலை - "அதற்கு ஆபிராம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே என்றான். பின்னும் ஆபிராம்: தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான் என்றான். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்றார்" (ஆதியாகமம் 15:2-4). ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார், ஆகவே தேவன் அவரை நீதிமானாக எண்ணினார். அதற்குப் பின் வயது சென்ற காலத்தில் ஆபிரகாமும் சாராளும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட குழந்தை ஈசாக்கைப் பெற்றெடுத்தார்கள். அவர்கள் பரிசாகப் பெற்ற இந்தக் குமாரனுக்காக அவர்கள் அடைந்த மகிழ்ச்சியும், நன்றியுணர்வுகளையும் ஒருவர் கற்பனை செய்து மட்டுமே பார்க்கலாம். ஆபிரகாமின்மேல் தேவன் பொழிந்திட்ட மேன்மையான சுதந்தரத்தின் உண்மையான பிள்ளை அவர் தான். ஆபிரகாமின் வாழ்க்கையில், இச்சூழ்நிலையில், இந்தக் குழந்தை மிக முக்கியமானதாகத் தோன்றியிருக்கும். ஆயினும், ஈசாக்கை பலி செலுத்தும்படிக்கு தேவன் ஆபிரகாமுக்குக் கட்டளையிட்டபோது, அவர் தேவன் பேரில் வைத்த விசுவாசம் அதிகமாக இருந்தபடியால், அந்தப் பரிசை அதிகமாக மதிப்பிடவில்லை. குறிப்பாக இந்தச் சூழ்நிலையில் அவருடைய விசுவாசத்தினால், அவர் நீதிமான் என்ற நிலையை அடைந்து, அவருடைய சந்ததிக்கு விரிவான சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார் ( ரோமர் 4:9).

**ஆபிரகாமின் சந்ததி ஈசாக்கைக் காட்டிலும் அதிகமானவர்கள்**

ஆபிரகாமின் சந்ததி, ஈசாக்கு மட்டுமல்ல, அவரைக் காட்டிலும் அதிகமானவர்கள் என்று வசனங்கள் கூறுகிறது. உண்மையில், ஆபிரகாமின் விசுவாசத்தின் பலனாக அதிகப்பட்சமான சந்ததி வாக்களிக்கப்பட்டதென்று ஆதியாகமம் 22:15-18 வசனங்கள் கூறுகிறது. "கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு: நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."

தேவனை ஆபிரகாம் விசுவாசித்ததினால் அவர் நீதிமானாக எண்ணப்பட்டார் என்று முன்னதாகவே ஆதியாகமம் 15:6-ஆம் வசனம் கூறுகிறது. ஈசாக்கை பலி செலுத்துவதற்கு அவர் கீழ்ப்படிந்தபோது, மேலும் கூடுதலாக இரண்டு பரிசுகளை, ஆபரகாமுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன் என்று தேவன் தம் பேரில் ஆணையிட்டார். முதலாவது, ஈசாக்குக்குப் பிறகு அவருடைய சந்ததியை, "வானத்தின் நட்சத்திரங்கள் போலவும் கடற்கரை மணலைப் போலவும்" பெறுகச் செய்வேன் என்றார்.

இரண்டாவதாக, பூமியிலுள்ள முழு குடும்பங்களும் அவருடைய சந்ததியின் வழியாக ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

அந்தச் சந்ததி, ஆபிரகாமின் சுதந்தரத்தில் ஒரு பங்கு என்பதை கலாத்தியர் 3-ஆம் அதிகாரத்திலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். (ஸ்டிராங்க்ஸ் G2817 ) ஏனெனில், இது தேவனுடைய வாக்குத்தத்தத்தினால் அளிக்கப்பட்டது என்று 18-ஆம் வசனம் உறுதிப்படுத்துகிறது. இந்தச் சந்ததியைப் பற்றிய ஒரு தெளிவான புரிந்துகொள்ளுதலை கலாத்தியர் 3-ஆம் அதிகாரம் நமக்களிக்கிறது. "அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக. மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது. அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்" (கலாத்தியர் 3:6-9).

ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை என்பதை இங்கு மறுபடியும் குறிப்பிடும்படியாக பவுல், ஆதியாகமம் 15-ஆம் அதிகாரத்தை மேற்கோள் காட்டுகிறார். அதற்குப் பின், பூமியிலுள்ள முழு ஜனங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய சந்ததியாக விசுவாசத்தின் மூலமாக நம்மையும் அந்தச் சந்ததியோடு இணைக்கிறார். நாம் கிறிஸ்துவை உடையவர்களாக இருந்தால் நாம் அனைவரும் ஆபிரகாமின் சந்ததியாகவும், வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரருமாகவும் இருக்கிறோம் என்று கூறி பவுல் நிறைவு செய்கிறார். நியாயமானபடி கிறிஸ்துவுக்குள் இருக்கும் அனைவரும் ஆபிரகாமின் சந்ததியாகவும், தங்களுடைய பலியின் உடன்படிக்கைக்கு விசுவாசமுள்ளவர்களானால், நம்முடைய ஆண்டவரோடு உடன் சுதந்தரவாளிகளாக இருப்பார்கள் (ரோமர் 8:16). கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும் வேலைகளில் இவர்கள் பங்கெடுத்துக்கொள்வார்கள். தேவனை உண்மையாக அறிந்துகொள்ளவும், மீண்டும் அவரோடு இசைந்து வருவதற்கும் இந்த இராஜ்யம் அனைவருக்கும் ஒரு வாய்ப்பளிக்கும்.

**வானத்தின் நட்சத்திரங்கள் மற்றும் கடற்கரை மணல்**

"நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (ஆதியாகமம் 22:17) என்று தேவன் வாக்களித்தார். இவ்வாறாக, ஆபிரகாமின் சந்ததிக்குள், பரலோகத்தைச் சுதந்தரித்துக்கொள்பவர்களும், பூமியைச் சுதந்தரித்துக்கொள்பவர்களும் இருக்கிறார்கள் என்பதை இந்த வசனம் வெளிப்படுத்துகிறது. ஈசாக்கின் வழியாக, ஆபிரகாம் பூமிக்குரிய சந்ததியாகிய இஸ்ரயேல் ஜாதிக்கு தந்தையானார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இந்தப் பூமிக்குரிய சந்ததியைக்குறித்து மேலும் சில வசனங்களை காணலாம் - ஆதியாகமம் 13:16, 28:14. இங்குப் பூமிக்குரிய சந்ததி பூமியின் மண்ணுக்கு ஒப்பிடப்படுகிறது. இந்தப் பூமிக்குரிய சுதந்தரத்திற்கான வாக்குத்தத்தம் யாக்கோபுக்கு கடந்துச் சென்றதைக்குறித்து ஆதியாகமம் 28:14-ஆம் வசனம் கூறுகிறது.

கலாத்தியர் 3-ஆம் அதிகாரம் மற்றும் வேறு வசனப் பகுதிகள் - கிறிஸ்துவின் மணவாட்டியைப் பரலோக சந்ததியாகக் காட்டுகிறது. இரண்டு வகுப்பாரைக்கொண்டிருக்கும் அந்தச் சந்ததியை மேலும் ஆதரிக்கும்படி , இஸ்ரயேலை, தேவனுடைய சொந்த ஜனம் என்றும் அவருடைய இராஜரிகமான ஆசாரியக் கூட்டம் என்றும் யாத்திராகமம் 19:5-6-ஆம் வசனங்கள் விவரிக்கிறது. அதுபோல பேதுருவும் சபையை, தேவனுடைய சொத்து என்றும் இராஜரிகமான ஆசாரியக் கூட்டம் என்றும் கூறுகிறார் (1 பேதுரு 2:9-10).

"பெருக்கம்" என்ற வார்த்தையைப் பொறுத்தவரையில், ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய சந்ததிகள், இரண்டு நிலையில் இருப்பதைப் புரிந்துகொள்ளலாம். அதாவது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தை உறுதிப்படுத்தும் காலத்தில் ஆபிரகாமின் ஒரே குமாரனாகிய ஈசாக்கை ஒப்பிட்டுப்பார்க்கும் போது, கிறிஸ்துவின் மணவாட்டி (வானத்தின் நட்சத்திரங்கள்) மற்றும் இஸ்ரயேல் (கடற்கரை மணல்) ஆகிய இரு வகுப்பாரும் மிக அதிகமாக உள்ளனர். தேவனுடைய திட்டம், ஆவிக்குரிய சந்ததியை 1,44,000 பேர்களாகப் பெருகச் செய்தது. ஈசாக்கை அல்லது வானத்தைப்பார்க்கும் போது மனுஷனால் எண்ணப்படும் நட்சத்திரங்களைக் காட்டிலும் இது அதிகமான எண்ணிக்கையாகும். அதுபோல, கிறிஸ்துவின் இராஜ்யம், இஸ்ரயேல் தேசத்தைப்

பெறச்செய்து, முழு மனுக்குலத்தையும் அதோடு இணைக்கிறது. கிறிஸ்துவின் இராஜ்யத்தின் வேலைகளின் வழியாக இந்த முழு மனுக்குலமும், "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசாயா 2:3). சீயோனிலிருந்து வரும் பிரமாணங்களுக்கும் எருசலேமிலிருந்து வரும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கும் இவர்கள் கீழ்ப்படிவார்கள். இவர்கள், "உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது" (ரோமர் 2:29).


"பெருக்கம்" என்ற எபிரெய வார்த்தைக்கு (ஸ்டிராங்க்ஸ் H7235) பெரிதாக, அல்லது சிறப்புமிக்க என்றும் பொருள்படுகிறது. அதுபோல தேவனுடைய அழைப்பை நிறைவேற்றும் அந்தச் சந்ததிகள் வானத்தின் நட்சத்திரங்கள், கடற்கரை மணலைப் போல ஆற்றல் மிக்கவர்களும், சிறப்பு மிக்கவர்களுமாக இருக்கிறார்கள். தேவனுடைய அழைப்பும் கிருபை வரங்களும் மாறாதவைகள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் (ரோமர் 11:29). ஆகவே தேவனால் அழைக்கப்பட்ட சபை மற்றும் இஸ்ரயேலைத் தொடர்ந்து, வரக்கூடிய கிறிஸ்துவின் இராஜ்யத்தில், பூமிக்குரிய சந்ததியும், பரலோகத்திற்குரிய சந்ததியும் தங்களுடைய பங்கைச் சிறப்பாக நிறைவேற்றுவார்கள்.

ஆபிரகாமின் சுதந்தரம், கானான் தேசத்தை விட அதிகமானதாக இருந்தது. தேவனால் விசேஷமாக அளிக்கப்பட்டு, மனித வரலாற்றில் முழுவதும் அது தொடர்ந்து நிறைவேறிக்கொண்டு வருவதினால் அவருடைய சுதந்தரத்தில் தேசம் ஒரு மிகப் பெரிய பங்காக இருந்தது. இறுதியாக, அற்புதவிதமாக தேவன் குறுக்கிட்டு, அவருடைய வல்லமையைப் பயன்படுத்தி அந்தத் தேசத்தை இஸ்ரயேலுக்கு நித்தியமான சுதந்தரமாக அளிப்பார். தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுப்பது, நம்முடைய ஆண்டவரின் விசுவாசத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆதியாகமம் 15-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள நிலம் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும், இந்தச் சுதந்தரத்தைப் பற்றி அறிந்துகொள்வதற்கு 6000 வருடங்கள் தேவைப்படும் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி 36 மற்றும் 37-ஆம் அதிகாரத்தில் விவரிக்கிறார். இஸ்ரயேலர்கள் தேசம் திரும்புவதை நாம் காணும்போது, இந்த எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் துவக்கம் வரையில் நிறைவடையாது.

அதுபோல, ஆபிரகாமின் சந்ததி பூமியிலுள்ள முழு குடும்பங்களை ஆசீர்வதிப்பதற்கான, கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜயத்தின் வேலைகள் முழுமையாக நிறைவேற்றுவார்கள். ஆபிரகாம் தான் வாழ்ந்த நாட்களில் சந்தோஷத்துடன் அனுபவிப்பதற்கு அந்தச் சுதந்தரம் கொடுக்கப்படவில்லை. அதற்குப்பதிலாக, "தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்" (எபிரெயர் 11:10) என்று வசனம் கூறுகிறது. ஆபிரகாம் விசுவாசத்தினால் அவருடைய சுதந்தரத்தை, கையில் பெற்றதாக எண்ணி களிகூர்ந்தார். எபேசியர் 1:13-ஆம் வசனத்தின்படி, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியின் ஒரு பகுதியான நம்முடைய சுதந்தரத்திற்கு ஒரு முத்திரையாக பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறோம். தேவனுடைய கிருபையாலும், விசுவாசத்தினாலும் கிறிஸ்துவின் மகிமையான இராஜ்யம் வரக்காத்திருக்கும் நாம் இப்போது, "பரலோக இடங்களில்" வசித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆதியில் இஸ்ரயேல் பெற்ற சுதந்தரம்

# அவருடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்கு ஒரு பாரம்பரிய சொத்து




"உங்கள் சுதந்தரபாகமான கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார்" (சங்கீதம் 105:11).

Michael Colletti

ஆபிரகாமின் சந்ததியார்களாகிய இஸ்ரயேலர்கள், தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களைச் சுதந்தரிப்பதற்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஒரு மிகப் பெரிய அளவில் இது உண்மையாகவும் இருந்தது. ஆபிரகாமின் உடன்படிக்கையில் தேவன் இரண்டு பகுதிகளை யாக்கோபுக்குக் கொடுப்பதாக மீண்டும் மீணடும் கூறினார். இவைகள் யாக்கோபுக்கும், இஸ்ரயேலுக்கும் உண்டாகும் சுதந்தரம்.

முதலில் தேவன் அவர்களுக்குக் கானான் தேசத்தைக் கொடுப்பார். "நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்" (ஆதியாகமம் 28:13). வாக்களிப்பட்ட தேசம், இஸ்ரயேலின் சுதந்தரத்தின் ஒரு பகுதி என்பதை சங்கீத புஸ்தகம் உறுதிப்படுத்துகிறது. "அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும் என்றென்றைக்கும் நினைத்திருக்கிறார். அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும், இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும் உறுதிப்படுத்தி: உங்கள் சுதந்தரபாகமான கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார்" (சங்கீதம் 105:9-11).

இரண்டாவதாக, யாக்கோபின் சந்ததி, முழு பூமியையும் விரிவாக்கி, நிரப்பும். "உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்" (ஆதியாகமம் 28:14). கால போக்கில் இஸ்ரயேல் ஆபிரகாமின் உடன்படிக்கையின் வழியாக புதிய உடன்படிக்கையின் கீழ், மாம்ச சந்ததியாக மாறுவார்கள் என்று இக்காரியம் குறிப்பிடுகிறது. இந்த உலகத்தின் ஜாதிகளும், புதிய உடன்படிக்கையின் கீழ் இரட்சிப்பைப் பெறும் வாய்ப்பைத் தழுவி இஸ்ரயேலர்களாக மாறிவிடுவார்கள் (ஏசாயா 2:2-3; ரோமர் 2:28-29).

### மோசே வரைக்கும் சுதந்தரம் செயலற்றதாக இருந்தது

யாக்கோபு தன்னுடைய குடும்பத்தை பதான் அராமில் கட்டி, கானானுக்குத் திரும்பி, யோசேப்பின் பாதுகாப்பின் கீழ் எகிப்துக்குச் செல்லும் வரையில் இஸ்ரயேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சுதந்தரம் செயலற்றதாக இருந்தது. "யோசேப்பை அறியாத ஒரு இராஜா" (யாத்திராகமம் 1:8) பாரோனின் அடிமைகளாக இஸ்ரயேலர்கள் கட்டாயப்படுத்தப்பட்டதினால், சுதந்தரம் கிடைக்க வாய்ப்பில்லாதது போல தோன்றியிருக்கலாம். ஆயினும், இஸ்ரயேலின் சுதந்தரத்தை, அவர்களின் சொந்த பலத்தினாலும், ஞானத்தினாலும் பெற்றுக்கொண்டு விடலாம் என்று அவர்கள் ஒரு போதும் எண்ண முடியாது. அவர்களுடைய தேவனுடைய ஞானத்தினாலும், வல்லமையினாலும் மட்டுமே அந்தச் சுதந்தரம் கொடுக்கப்படும்.

தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் எல்லா சுதந்தரத்திலும் உள்ள ஏழு **கோட்பாடுகளை** நமக்கு வெளிப்படுத்துகிறது. **முதலாவது,** எந்தச் சுதந்தரமும், தேவனுடைய வல்லமை, ஞானம் மற்றும் கிருபையினால் மட்டுமே பெற முடியும். "அவர்கள் முகத்திற்கு முன்பாக ஜாதிகளைத் துரத்திவிட்டு, தேசத்தை நூல்போட்டுப் பங்கிட்டு, அவர்களுடைய கூடாரங்களில் இஸ்ரவேலின் கோத்திரங்களைக் குடியேற்றினார்"(சங்கீதம் 78:55).

**இரண்டாவதாக,** தேவன் ஒருவருக்காக தேர்வு செய்யும் சுதந்தரம், அவர்களுக்கு மட்டும் நித்தியமானதாக இருக்க முடியும். "தமக்குப் பிரியமான யாக்கோபின் சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார்" (சங்கீதம் 47:4). "அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" (சங்கீதம் 136:21).

**மூன்றாவதாக,** தேவனுடைய சித்தத்திற்கு இசைவில்லாத எந்தச் சுதந்தரமும் கவிழ்க்கப்படும். இஸ்ரயேலை ஒழுங்குப்படுத்தும்படிக்கு

புறஜாதியாரின் காலத்தில், இஸ்ரயேலின்மேல், புறஜாதிகளுடைய ஆளுகையை தேவன் 2520 வருடங்கள் அனுமதித்தார். ஆனால் இறுதியாக தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல் மற்றும் எரேமியா எழுதியது போல, "என் தேசத்தைக் கொள்ளையிடப்பட்ட வெளியாக்கும்படிக்கு அதை முழு இருதயத்தின் சந்தோஷத்தோடும் கர்வமான மனதோடும் தங்களுக்குச் சுதந்தரமாக நியமித்துக்கொண்ட புறஜாதிகளில் மீதியானவர்களுக்கு விரோதமாகவும் ஏதோம் அனைத்துக்கும் விரோதமாகவும், என் அக்கினியான எரிச்சலினால் பேசினேன் என்று நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்." (எசேக்கியேல் 36:2-5). "என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னுடனே இருக்கிறேன்; உன்னைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமல், உன்னை மட்டாய்த் தண்டிப்பேன்; ஆனாலும் உன்னை நான் குற்றமில்லாமல் நீங்கலாக விடுவதில்லையென்கிறார்"(எரேமியா 46:28).

### அறிந்துகொண்ட தேசத்தை சுதந்தரித்தல்

தேவன் முட்செடியின் மத்தியில் மோசேக்குக் காட்சியளித்த போது, இஸ்ரயேல் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வதைக்குறித்து முதலில் குறிப்பிடப்பட்டது. "அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்" (யாத்திராகமம் 3:8). தேவன் இந்தக் குறிப்பை மீண்டும் யாத்திராகமம் 6:8-இல் கூறுகிறார். "ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட தேசத்தில் உங்களைக் கொண்டுபோய், அதை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன்."

நாற்பது வருடங்களுக்கு முன்னதாகவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடையாமல் போனதற்கான காரணத்தை, இஸ்ரயேலர்கள் யோர்தான் நதியைச் சேர்ந்து, அதைக் கடப்பதற்கு முன், ஜனங்களிடம் கூறும்படிக்கு தேவன் மேசேயிடம் கூறினார்.

"உங்கள் தேவனாகிய கர்த்தர் நீங்கள் பாளயமிறங்கத்தக்க இடத்தைப் பார்க்கவும், நீங்கள் போகவேண்டிய வழியை உங்களுக்குக் காட்டவும், இரவில் அக்கினியிலும் பகலில் மேகத்திலும் உங்களுக்குமுன் சென்றாரே. இப்படியிருந்தும், இந்தக் காரியத்தில் நீங்கள் அவரை விசுவாசியாமற் போனீர்கள். ஆகையால் கர்த்தர் உங்கள் வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டு, கடுங்கோபங்கொண்டு: உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட அந்த நல்ல தேசத்தை இந்தப் பொல்லாத சந்ததியாராகிய மனிதரில் ஒருவரும் காண்பதில்லை என்றும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேப்மாத்திரம் அதைக் காண்பான்; அவன் கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினால், நான் அவன் மிதித்துவந்த தேசத்தை அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன் என்றும் ஆணையிட்டார்" (உபாகமம் 1:32-36).

தேவனால் வாக்களிக்கப்பட்ட சுதந்தரத்தைப் பொருத்தவரையில் இந்த வசனங்கள் **நான்காவது** கோட்பாட்டை வெளிப்படுத்துகிறது. வாக்களிக்கப்பட்ட சுதந்தரத்தின்மேல் ஒருவர் விசுவாசம் வைத்து, அதைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு கீழ்ப்படிதலைக் காட்ட வேண்டும். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரயேலின் சந்ததி இந்தப் பாடத்தை என்றும் கற்றுக்கொள்ளவே இல்லை (சங் 95:7-11).

### இறுதியாக தேசத்தைச் சுதந்திரித்துக் கொள்ளுதல்

வனாந்தர பயணத்தில் எகிப்திலிருந்து புறப்பட்டவர்கள் மரிக்கும் வரையில், அவர்களுடைய சந்ததி தேசத்தைச் சுதந்தரிக்கவில்லை. "உனக்கு முன்பாக நிற்கிற நூனின் குமாரனாகிய யோசுவா அதில் பிரவேசிப்பான்; அவனைத் திடப்படுத்து; அவனே அதை இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகப் பங்கிடுவான்" (உபாகமம் 1:38) என்று தேவன் மோசேயிடம் கூறினார். "கர்த்தர் உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு, நான் யோர்தானைக்

கடந்துபோவதில்லை என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற அந்த நல்ல தேசத்தில் நான் பிரவேசிப்பதில்லை என்றும் ஆணையிட்டார்" (உபாகமம் 4:21) என்று மோசே கூறினார்.

தேசம் பங்கிடுதலைக்குறித்து தேவன் மோசேயிடம் சொன்ன கட்டளைகளே, தேசம் அவர்களுடைய சுதந்தரம் என்பது நிரூபணம் ஆகிறது. "இவர்களுடைய பேர்களின் இலக்கத்திற்குத்தக்கதாய் தேசம் இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிடப்படவேண்டும். அநேகம்பேருக்கு அதிக சுதந்தரமும் கொஞ்சம்பேருக்குக் கொஞ்ச சுதந்தரமும் கொடுப்பாயாக; அவர்களில் எண்ணப்பட்ட இலக்கத்திற்குத் தக்கதாக அவரவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கப்பட வேண்டும்" (எண்ணாகமம் 26:53-54).

**தம்முடைய சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இஸ்ரவேல் போரிட வேண்டியதாக இருந்தது**

தம்முடைய சுதந்தரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இஸ்ரயேல் சில வேலையை நிறைவேற்றுவது அவசியமாக இருந்தது. "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்தில் போய்ச் சேரும்போது, அத்தேசத்துக் குடிகளையெல்லாம் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிட்டு, அவர்களுடைய எல்லாச் சிலைகளையும் வார்ப்பிக்கப்பட்ட அவர்களுடைய எல்லா விக்கிரகங்களையும் அழித்து, அவர்கள் மேடைகளையெல்லாம் நிர்மூலமாக்கி, தேசத்திலுள்ளவர்களைத் துரத்திவிட்டு, அதிலே குடியிருக்கக்கடவீர்கள்; அந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அதை உங்களுக்குக் கொடுத்தேன். சீட்டுப்போட்டு, தேசத்தை உங்கள் குடும்பங்களுக்குச் சுதந்தரங்களாகப் பங்கிட்டு, அதிக ஜனங்களுக்கு அதிக சுதந்தரமும், கொஞ்ச ஜனங்களுக்குக் கொஞ்சச் சுதந்தரமும் கொடுக்கக்கடவீர்கள்; அவரவர்க்குச் சீட்டு விழும் இடம் எதுவோ, அவ்விடம் அவரவர்க்கு உரியதாகும்; உங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களின்படியே சுதந்திரம் பெற்றுக்கொள்ளக்கடவீர்கள். நீங்கள் தேசத்தின் குடிகளை உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடாமலிருப்பீர்களானால், அப்பொழுது அவர்களில் நீங்கள் மீதியாக வைக்கிறவர்கள் உங்கள் கண்களில் முள்ளுகளும் உங்கள் விலாக்களிலே கூர்களுமாயிருந்து, நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே உங்களை உபத்திரவப்படுத்துவார்கள்" (எண்ணாகமம் 33:51-55) என்று தேவன் கூறினார்.

அந்தத் தேசத்தின் குடிகளை, வெளியேற்றுவதற்கும், அவர்களின் அனைத்து விக்கிரகங்களையும் அழிப்பதற்கும் இஸ்ரயேலர்கள் யுத்தம் செய்ய வேண்டியதாக இருந்தது. இவர்கள் அனைவரும் தேவனுடைய எதிராளிகளாக இருந்தனர். ஆகவே இஸ்ரயேலர் அவர்களை மேற்கொள்ள வேண்டிதாக இருந்தது. இல்லாவிட்டால் இவர்கள் இஸ்ரயேலர்களுக்குத் தொடர்ந்து ஒரு முள்ளாக இருந்துவிடுவார்கள். இஸ்ரயேலர்கள் தேவனுடைய ஆலோசனையைப் பின்பற்றவில்லை. இவர்கள் அந்தத் தேசத்தின் ஜனங்களைச் சுத்திகரிக்கவும் இல்லை, அங்குள்ள விக்கிரங்களை அழிக்கவும் இல்லை. இதன் விளைவாக, இவர்கள் இஸ்ரயேலருக்குத் தொடர்ந்து சோதனையாக இருந்தார்கள். இது தேவனுடைய சுதந்தரத்தின் **ஐந்தாவது** கோட்பாட்டை நமக்கு வெளிப்படுத்துகிறது. தேவனுடைய சுதந்தரத்தை உணர்ந்துகொள்வதற்கு, ஒருவர் பாவத்திற்கு எதிராகப் போர் செய்து, விக்கிரகாரதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

**நியாயப்பிரமாணம், இஸ்ரயேலின் சுதந்திரத்தின் ஒரு பகுதியாக இருந்தது.**

இஸ்ரயேலர்கள் தேசமாகப் பெற்ற சுதந்தரத்தைக் காட்டிலும், அதில் அதிகமாகப் பெருகுவதே, நியாயப்பிரமாணத்தின் கீழ் முக்கியமான சுதந்தரமாக இருந்தது. தேவனுடைய பிரமாணம், அவருடைய சாட்சிகள், கற்பனைகள் மற்றும் கட்டளைகளும், இஸ்ரயேலர்களின் சுதந்தரத்தின் ஒரு பகுதியாக இருந்தது. "மோசே நமக்கு ஒரு நியாப்பிரமாணத்தைக் கற்பித்தான்; அது யாக்கோபின் சபைக்குச் சுதந்தரமாயிற்று" (உபாகமம் 33:4). "உம்முடைய சாட்சிகளை நித்திய

சுதந்தரமாக்கிக்கொண்டிருக்கிறேன், அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி" (சங்கீதம் 119:111) என்று தாவீது கூறுகிறார்.

நியாயப்பிரமாணத்தின் கீழ் இஸ்ரயேலரின் சுதந்தரத்தின் பகுதியைக்குறித்த பதிப்பை சங்கீதம் 19:7-11-ஆம் வசனங்கள் நம்முடைய கவனத்திற்குக்கொண்டுவருகிறது. "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறது மாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறது மாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறது மாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு."

இது தேவனுடைய சுதந்தரத்தின் **ஆறாவது** கோட்பாட்டை நமக்குக் கற்பிக்கிறது. தேவனுடைய சுதந்தரம், விசேஷமாக, அவருடைய சத்தியத்தின் வார்த்தைகள், மதிப்புக்கொண்டதும், நித்திய ஜீவனுக்கு மகிழ்ச்சிக்கும் வழிநடத்தக்கூடியதாக இருக்கிறது.

**சுதந்தரத்தின் உரிமையை இழப்பது**

தேவன் அவருடைய நியாயப்பிரமாணத்தை இஸ்ரயேலுக்குக் கொடுத்தபோது, அவர்களின் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையின் அடிப்படையில் அவர்களுக்கு முன் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைத்தார். "நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால், நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன்; பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும். தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன்; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொள்வீர்கள்; துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவேன்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை. உங்கள் சத்துருக்களைத் துரத்திவிடுவீர்கள்; அவர்கள் உங்கள் முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள். நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்." (லேவியராகமம் 26:3, 4, 6, 7, 12).

"நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில்: நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால், கண்களைப் பூத்துப்போகப்பண்ணுகிறதற்கும், இருதயத்தைத் துயரப்படுத்துகிறதற்கும், திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணுவேன்; நீங்கள் விதைக்கும் விதை விருதாவாயிருக்கும்; உங்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள். நான் உங்களுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்புவேன்; உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள்; துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள். இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும், இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டிப்பேன்" (லேவியராகமம் 26:14-18).

அநேக ஒழுங்குகள் இருந்தபோதிலும், இஸ்ரயேலர்கள், தேவனிடத்திலும் அவருடைய பிரமாணத்திற்கும், மனதை திருப்பக்கூடிய கீழ்ப்படிதலின் எந்தவிதமான பாடத்தையும் கற்றுக்கொள்ளவில்லை. இதன் விளைவாக இஸ்ரயேலர்கள் தங்களுடைய சுதந்தரத்தை தற்காலிகமாக இழந்துவிடுவார்கள் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைத்தார். "பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக்

கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசேக்கியேல் 21:26-27).

புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரும், மெல்கிசெதேக்கின் முறைமையின் படி பிரதான ஆசாரியரான உயிர்த்த இயேசு, இஸ்ரயேலருக்கு வாக்களிக்கப்பட்ட சுதந்தரத்தை நித்தியமாகக் கொடுப்பார். "ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபிரெயர் 9:15).

இஸ்ரயேலர் கானான் தேசத்தை இழந்து, தேவனுடைய சுதந்தரத்தின் **ஏழாவது** கோட்பாட்டை நமக்குக் கற்பிக்கிறது. நாம் துவக்கத்தில் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டாலும் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் குறைவினால், அதை **இழக்க** நேரிடம்.

**முடிவுரை**

பிரமாணத்தின் கீழ், இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட சுதந்தரம் மற்றும் அதைத் தக்கவைத்துக்கொள்ளாமல் தோல்வி அடைந்ததும், இயேசுவின் சீஷர்களுக்கு முக்கியமான பாடங்களைக் கற்பிக்கிறது.

* தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு சுதந்தரம், அவருடைய கிருபை , ஞானம் மற்றும் வல்லமையின் வழியாக மட்டுமே பெறமுடியும்.

* தேவன் ஒருவருக்கு ஒரு சுதந்தரத்தைத் தேர்வு செய்தபின், அவர் மட்டுமே அந்தச் சுதந்தரத்தை நித்தியமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

* தேவனுடைய சித்தத்திற்கு இசைவில்லாத எந்தச் சுதந்தரமும் கவிழ்க்கப்படும்.

*ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அதன் பேரில் விசுவாசம் கொண்டவர்களாக தேவனிடத்தில் கீழ்ப்படிதலை காண்பிக்க வேண்டும்.

* ஒருவர் தேவனுடைய சுதந்தரத்தை அறிந்துகொள்வதற்கு, பாவத்திற்கு எதிராக யுத்தம் செய்து, விக்கிரகாரதனையை மேற்கொள்ள வேண்டும்.


* தேவனுடைய சுதந்தரம், விசேஷமாக அவருடைய சத்திய வார்த்தை, மதிப்பைக் கொண்டதும், நித்திய ஜீவனுக்கும் மகிழ்ச்சிக்கும் வழிநடத்தக்கூடியதாக உள்ளது.

* விசுவாச குறைச்சல் மற்றும் கீழ்ப்படியாமை, இவ்விரண்டுமே தேவனிடத்தில் நாம் பெற்றுக்கொண்ட எந்தச் சுதந்தரத்தையும் இழக்கச் செய்யும்.

நியாயப்பிரமாணத்தின் கீழ், இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட பூமிக்குரிய சுதந்தரத்தை, தக்க வைத்துக்கொள்வதற்குத் தேவைப்படும் விசுவாசமும், கீழ்ப்படிதலும் அவர்களிடம் காணப்படவில்லை. ஆயினும், இறுதியில் கிறிஸ்துவும், சபையும் இஸ்ரயேலர்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுதந்தரத்தைப் பூமிக்குரிய இராஜ்யத்தில் கொடுப்பார்கள். "இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார் என்றும்; நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது" (ரோமர் 11:26-27).

கிறிஸ்துவின் சுதந்தரம்

# முழங்கால்கள் யாவும் முடங்கும்




"அந்த ஜனங்களுக்காகமாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்" (யோவான் 11:52).

Robert Brand

இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களையும் ஆண்டவரோடு உடன்பங்காளிகளாக இருக்கப் போவதை எதிர்நோக்கும் போது, நம்முடைய ஆண்டவராம் இயேசுகிறிஸ்துவின் ஜீவன் மற்றும் மரணத்தின் முக்கியத்துவத்தை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மரித்தோரின் உயிர்த்தெழுதல் மற்றும் அனைவருக்கும் வருங்காலத்திற்குரிய எதிர்நோக்கு அவருடைய முழுமையான விசுவசம் இல்லாமல் நடைபெறாது.

### கிறிஸ்துவின் உடன்பங்காளிகள்

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" என்று ரோமர் 8:16-17-ஆம் வசனங்கள் கூறுகிறது. புது சிருஷ்டியின் அங்கத்தினர் ஆண்டவரோடு உடன்பங்காளிகளானால் இயேசு தாமே பிரதான சுதந்தரவாளியாவார். அதிர்ஷ்டவசமாக, கிறிஸ்துவின் சுதந்தரத்தைப் பற்றி வசனங்கள் அதிகமாகக் கூறுகிறது.

கிறிஸ்துவின் சுதந்தரம் - மனுஷனுடைய இரட்சகர். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் கிறிஸ்துவின் பங்கைக்குறித்து முதல் துப்பு சாத்தானுக்குக் கொடுத்திட்ட சாபத்தில் காணப்படுகிறது. "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" (ஆதியாகமம் 3:15). குதிங்காலை நசுக்குவதில் காயம் ஏற்படுவதுபோல, எதிராளியான சாத்தான் மனுகுலத்தைக் காயப்படுத்தி, ஆண்டவரின் சரீரத்தின் பாத அங்கத்தினரைக் காயப்படுத்துவதற்கு சில விசேஷித்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. ஆயினும் தலையை நசுக்கும் காரியம் ஒரு மரண அடியைக்குறிப்பிடுகிறது. சாத்தான் அழிக்கப்படுவான் என்று இந்தத் தீர்க்கதரிசனம் கூறுகிறது (வெளிப்படுத்தல் 20:10). இரட்சகரின் விசுவாசத்தின் நம்பிக்கை, தேவனுடைய முன் அறிவையும், மனுஷ சிருஷ்டிப்பை மீட்பதற்கு அவருடைய திட்டத்தையும் செயலாற்றுகிறது. ஆகவே மனுஷ இரட்சகராக இருப்பதும் கிறிஸ்துவின் சுதந்தரத்தின் பங்காக உள்ளது.

### நீதி முதலில் திருப்தியாக்கப்பட வேண்டும்

ஆயினும் மனுக்குலம் ஆதாமின் தீர்ப்பிலிருந்து மீட்கப்படுவதற்கு முன் தெய்வீக நீதி நிறைவேற்றப்பட வேண்டும். இதை நிறைவேற்றவதற்கு இயேசு மாம்சத்தில் வரவேண்டியதாக இருந்தது. நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய வேலை மற்றும் அதின் மைய நோக்கத்தை மேலோட்டமாக, எபிரெயர் 2:9, 14 வசனங்கள் நமக்குத் தருகிறது. "என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்."

ஆதாம் மற்றும் அவருடைய சந்ததியின்மேல் இருக்கும் அந்த மரணத்தீர்ப்பு நீங்கும்படியாக மனுக்குலத்தில் வருங்கால ஆசீர்வதங்களுக்கான, எல்லா தீர்க்கதரிசனங்களும் நிறைவேற்றப்பட்ட தெய்வீக நீதியையே சார்ந்திருக்கிறது. "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல,

கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:20-22). கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். "கண்ணுக்குக் கண்" (யாத்திராகமம் 21:23-25) என்ற தெய்வீக பிரமாணத்திற்கு, பாவத்தில் விழுந்த ஒரு பரிபூரண மனுஷ ஜீவனை மீட்பதற்கு ஒரு கீழ்ப்படிதலுள்ள பரிபூரண மனுஷனுடைய ஜீவன் தேவைப்பட்டது. ஆகவே, மரணத்தின் கட்டிலிருந்து முழு மனுக்குலத்தை விலைக்கு வாங்குவதற்கு இயேசு ஆதாமுக்காக மரித்தார்.

இந்த உபதேசம், "எல்லாருக்கும் ஈடுபலியாக" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பலியை தனியாக செலுத்தினவர் நம்முடைய ஆண்டவராம் இயேசு (சங்கீதம் 49:7). இந்தப் பலியைச் செலுத்துவதற்கு இயேசு மட்டுமே தகுதி பெற்றிருந்தார். ஏனெனில், அவர் பரிபூரண மனுஷனாக மட்டுமல்ல, பாவமில்லாமலும் வாழ்ந்தவர். இது எபிரெயர் 4:15-ஆம் வசனத்தில் தெளிவாகிறது. "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்."

### கிறிஸ்துவின் பலி அவருடைய சுதந்தரத்தை உறுதிப்படுத்துகிறது

இயேசுவின் பூமிக்குரிய ஊழியமே, அவர் நித்தியமாகப் பெறக்கூடிய சுதந்தரத்திற்கு மேடை அமைத்து. அவருடைய முதல் வருகையே அவருடைய இரண்டாம் வருகையை சாத்தியமாக்கியது. கல்வாரி சிலுவைக்குப் போவதற்குமுன், "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்கள் பிழைப்பீர்கள்" (யோவான் 14:19) என்று இயேசு சீஷர்களிடம் கூறினார். இங்கு இயேசு தன்னுடைய சுதந்தரத்தைப் பற்றியும், அடிச்சுவடுகளைப் பின் பற்றுகிறவர்களின் சுதந்தரத்தையும் பற்றி கூறுகிறார்.

கிறிஸ்துவின் பலியிலும், அவருடைய ஆவிக்குரிய சுதந்தரத்தில் நாம் பங்கெடுக்கக்கூடிய நம்முடைய நம்பிக்கை மறைக்கப்பட்ட இரகசியமாக இருக்கிறதாக அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். "உங்கள்பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோசெயர் 1:26-27). முதல் முறையாக தேவன் மனுஷனோடு தொடர்புகொள்ளும்போது, தேவனுடைய சித்தத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்க உடன்படிக்கை செய்தவர்கள், மரணபரியந்தம் விசுவாசத்தைக் காத்துக்கொண்டால், இயேசுவின் ஈடுபலியின் மூலமாக உறுதியளிக்கப்பட்ட பூமிக்குரிய சுதந்தரத்தைக் காட்டிலும், மகிமையுள்ள பரலோக பரிசைப் பெறுவார்கள். எப்படிப்பட்ட ஒரு நம்பிக்கை!

### கிறிஸ்துவின் சுதந்தரம் - திவ்விய சுபாவம்

நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய ஊழியம் விசுவாசத்தோடு நிறைவேற்றினபின் அவர் திவ்விய சுபாவத்தை பரிசாகப் பெற்று, ஆவிக்குரிய ஜீவியாக பரலோக பிதாவினிடத்தில் ஏறிச் சென்றார். இது கிறிஸ்துவின் சுதந்தரத்தின் ஒரு பகுதி. இனி ஒருபோதும் ஆதாமுக்கான ஈடுபலியாக, இந்தப் பூமிக்குரிய கட்டுகளால் கட்டப்படாமல், மனுஷனுடைய இரட்சகராக தன்னுடைய பணியைத் தொடர்ந்து நடத்த பாத்திரவானார். ஆண்டவரின் ஜனங்கள், இப்போது கிறிஸ்து இயேசுவின் கண்ணுக்குத் தெரியாத இரண்டாவது பிரசன்னத்தைப் புரிந்துகொள்வதற்கான சிலாக்கியத்தைப் பெற்றிருந்தாலும், இந்த மனுக்குலம் அறியாமையினால், எப்பிஃபானியா என்று அழைக்கப்படும் (ஸ்டிராங்க்ஸ் G2015) நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். "நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்" (2 தெசலோனிக்கேயர் 2:8). இது நீண்ட காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்து துவங்கப்பட்ட தேவனுடைய இராஜ்யத்தின் வேலைகள்.

**கிறிஸ்துவின் சுதந்தரம் - நரகம் மற்றும் மரணத்தின் திறவுகோல்கள்**

"மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" (வெளிப்படுத்தல் 1:18). ஒருவேளை, "வரக்கூடிய யுகங்களைப்" பற்றியும், தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய தெய்வீக அற்புதங்களைப் பற்றியும் உண்மையாகவே இந்த, "மரணத்தின் திறவுகோல்கள்" வெளிப்படுத்தக்கூடியதாக இருப்பதினால், இதுவே நம்முடைய ஆண்டவரின் மிகப் பெரிய சுதந்தரமாக இருக்க வேண்டும். தெய்வீக சுபாவத்தோடு எழுந்திருக்கும் கிறிஸ்து, பிரேத குழிகளிலிருக்கும் மனுக்குலத்தை எழுப்புவதற்கு வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார். "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28-29) என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

**கிறிஸ்துவின் சுதந்தரம் - போதனை, மனுக்குலத்தை நியாயம் விசாரித்தல்**

மரித்தோரின் உயிர்த்தெழுதலோடு, தேவனுடைய நியாயத்தீர்ப்பு துவங்கும். அதிர்ஷ்டவசமாக, விழித்தெழும் உலக மனுக்குலத்திற்கு நடக்கக்கூடிய நியாயத்தீர்ப்பு ஒருநாளில் நடக்கக்கூடிய தீர்ப்பு அல்ல, மாறாக கற்றுக்கொள்வதற்கும், கல்வி மற்றும் தேவனுடைய நீதியின் கோட்பாடுகளைப் புரிந்துகொள்வதற்கான காலமாக இருக்கும். நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையை அந்த நீதியின் கோட்பாடுகளோடு இசைந்து செயல்படுத்த வேண்டியதாக இருக்கும்.

சாத்தான் கட்டப்படுவதினால், மரணநித்திரையிலிருந்து எழுப்பப்பட்டவர்கள் மற்றும் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் துவக்கத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், நம்முடைய ஆதி பெற்றோர் தொலைத்த பரிபூரண நிலையை அடைவார்கள் (வெளிப்படுத்தல் 20:2-3). நீதியைக் கற்றுக்கொள்ளும் செயல்முறையானது இக்காலத்தைக் காட்டிலும் எளிதாயிருக்கும். நம்முடைய இடுக்கமான இந்த வாழ்க்கையைக் காட்டிலும், மனுக்குலம் "பெரும்பாதையான" வழியில் நித்திய ஜீவனைப் பெற்று மகிழ்வார்கள் (ஏசாயா 35:8).

கிறிஸ்துவின் சுதந்தரம் - ஜாதிகளுக்குமேல் அதிகாரம் - இக்காலத்தைக்குறித்து, "நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன் என்றார். தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்; என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்; இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர்" (சங்கீதம் 2:6-9) என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. மகிமையில் இயேசுவே இராஜாவாக இருப்பார். ஒவ்வொருவரையும் இயேசு தம்முடைய ஈடுபலியினால் விலைக்கு வாங்குவார் - முழு மனுக்குலமும். ஜாதிகளை நீக்கி, அவருடைய இராஜ்யத்தின் பிரமாணங்களைச் செயலாற்றுவதற்கான அதிகாரமும், வல்லமையும் இயேசுவின் சுதந்தரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9).

**கிறிஸ்துவின் சுதந்தரம் - மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியர்.**

"அல்லாமலும், மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறார் என்று சொல்லியிருப்பதினால், மேற்சொல்லியது மிகவும் பிரசித்தமாய் விளங்குகிறது. அவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல், நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி

என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்" (எபிரெயர் 7:15-17) என்று கூறுகிறது.

இந்த வாக்கியத்திற்கு சங்கீதம் 110:4-6-ஆம் வசனங்கள் விரிவாக்கம் அளிக்கிறது. "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார். உம்முடைய வலது பாரிசத்திலிருக்கிற ஆண்டவர், தமது கோபத்தின் நாளிலே ராஜாக்களை வெட்டுவார். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார்; எல்லா இடங்களையும் பிரேதங்களால் நிரப்புவார்; விஸ்தாரமான தேசங்களின்மேல் தலைவர்களாயிருக்கிறவர்களை நொறுக்கிப்போடுவார்."

மெல்கிசேதேக்கு, (அவருடைய பெற்றோரைப் பற்றியும் அவருடைய மரணத்தைப் பற்றியும் வேதாகமத்தில் எந்தக்குறிப்பும் இல்லை.) ஒரு ஆசாரியராகவும், இராஜாவாகவும் இருந்தார். சங்கீதம் 110-இல், இயேசுவின் சுதந்தரமும், மெல்கிசேதேக்கைப் போல, வம்ச வரலாறும், பரலோகத்தின் தேவனால் நியமிக்கப்பட்டதுமாகவும் இருக்கிறது. மதம் மற்றும் அரசியல் அதிகாரத்தையும் தேவனோடு இசைந்திருப்பதற்கு மனுக்குலத்தைத் திரும்ப பரிபூரணத்திற்குக் கொண்டு வரும் வல்லமையையும் மெல்கிசே தேக்கின் ஆசாரியத்துவம் இயேசுவுக்குக் கொடுத்தது (எபிரெயர் 7:1).


### கிறிஸ்துவின் சுதந்தரம் - சாத்தானைக் கட்டுதல் மற்றும் மனுக்குலத்தை ஆசீர்வதித்தல்

நம்முடைய ஆண்டவர் தம்முடைய ஆசாரியத்துவமான, இராஜரீக பொறுப்புகளோடு, பூமியிலுள்ள குடும்பங்களை ஆசீர்வதித்து அவருடைய தெய்வீக சுதந்தரத்தை நிறைவேற்றுவார் (ஆதியாகமம் 12:3; 22:18). மனுக்குலம் முழுமையாக இரட்சிக்கப்படுவதற்கு, முதன்மையான வாய்ப்பு கொடுப்பதே கிறிஸ்துவின் இராஜ்யமாகும். மனித குடும்பம் உடல் ரீதியான பரிபூரணத்தை மட்டுமல்ல, தனிப்பட்ட நபர்கள் தேவனிடத்தில் காட்டும் கீழ்ப்படிதலினால், மனரீதியாகவும் பரிபூரணமுள்ளவர்களாகவும் எழுப்பப்படுவார்கள். இக்காரியங்கள் நிறைவேற்றப்படுவதற்கு சாத்தானுடைய தீமையான பாதிப்புகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இப்படியாக, சாத்தானை ஆயிரம் வருடம் கட்டுவதற்கான வல்லமையும் அதிகாரமும் நம்முடைய ஆண்டவரின் சுதந்தரத்தின் மற்றொரு பங்காக இருக்கிறது. "பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்" (வெளிப்படுத்தல் 20:2).

### கிறிஸ்துவின் சுதந்தரம் - மனுக்குலத்தை தேவனிடம் திரும்பச் சேர்ப்பது

எதிராளியாகிய சாத்தான் கட்டப்பட்டபின் மனுக்குலம், "பரிசுத்தமான பெரும்பாதையில்" பரிபூரணத்தை நோக்கி முன்னேறிச் செல்வார்கள் (ஏசாயா 35:8). மனித குடும்பத்தின் பெரும்பாலானோர், உண்மையில் முழுமையான உயிர்த்தெழுதலை - உடல் ரீதியாகவும், மனரீதியாகவும், ஆவிக்குரிய பரிபூரணத்தையும் அடைவார்கள் என்று நாம் நம்புகிறோம். மனுக்குலம் தேவனிடத்தில் திரும்புவதற்கான இயேசுவின் மற்றொரு சுதந்தரத்தை நிறைவேற்ற இக்காரியம் சாத்தியமாக்கும். "அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" (1 கொரிந்தியர் 15:24-26, 28).

# மகிமைக்கும், ஊழியத்திற்கும் அழைக்கப்படுதல்



"அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் வீட்டையாவது, பெற்றாரையாவது, சகோதரரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டுவிட்ட எவனும், இம்மையிலே அதிகமானவைகளையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடையாமற்போவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 18:29-30).

Tom Gilbert

தங்களை கிறிஸ்தவர்கள் என்று அடையாளம் கண்டுபிடிக்கும் அனைவரும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின்மேல் விசுவாசத்தையும், ஓரளவு அறிவையும் பெற்றிருப்பார்கள். இதுவரையில் வாழ்ந்த ஒவ்வொருவரும், எந்த இனத்தாரானாலும் சரி, எந்தக் குணமானாலும் சரி, எந்தத் தேசமானாலும் சரி அல்லது எந்த மத நம்பிக்கையுள்ளவர்களானாலும் சரி - எல்லோரும் அவருடைய விசாலமான திட்டத்திற்குள் ஒன்றிணைக்கப்படுவார்கள் என்ற இந்த ஆழமான புரிந்துகொள்ளுதலை வெகு சிலரே கொண்டுள்ளனர்.

தேவனுடைய முழுமையான இரட்சிப்பின் திட்டத்தில், குறித்த (சரியான) காலம் வரும்வரையில் இரண்டு **இரகசியங்கள்** அல்லது **மறைபொருள்கள்** பல யுகங்களாகவும், பல தலைமுறைகளாகவும் மறைக்கப்பட்டிருந்தது. கடந்த 2000 வருடங்களாக வெகு சிலரே, தேவனுடைய திட்டத்திலுள்ள இந்த இரண்டு இரகசியத்தையும் புரிந்துகொண்டிருக கிறார்கள்.

## தேவனுடைய திட்டத்திலுள்ள முதல் இரகசியம்

அப்போஸ்தலனாகிய பவுல், எபேசியர் 1:4-5, 8-12-ஆம் வசனங்களில், முதல் இரகசியத்தைக்குறித்து விவரிக்கிறார். "தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் **இரகசியத்தை** எங்களுக்கு அறிவித்தார். மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்."

தேவன் அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்துவின் தலைமையின் கீழ் - தம்முடைய முழு சிருஷ்டிப்புகளையும் ஒன்றிணைப்பதே அவருடைய நோக்கமாக இருக்கிறது. இதுவே **முதல் இரகசியம்**. இதை நிறைவேற்றுதற்கு தேவன் அவருடைய இரட்சிப்பின் திட்டத்தை மனுக்குலம் அறிந்துகொள்ளும்படிக்கு தம்முடைய குமாரனை அனுப்பி, "எங்குமுள்ள ஜனங்கள் மனம் திரும்பும்படிக்கு" (அப்போஸ்தலர் 17:30) பாவம் மற்றும் மரண தீர்ப்பிலிருந்து மனுக்குலம் விடுதலைப் பெறுவதற்கு தம்முடைய ஜீவனைப் பலியாகக்கொடுத்தார். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல, அனைவரும் மனந்திரும்ப வேண்டும் என்று அவர் விரும்புகிறார் (2 பேதுரு 3:9). ஆகவே, மனித சிருஷ்டிப்பு தங்களுடைய பாவத்தினால் தொலைத்த சகலத்தையும் அவர்களுக்குத் திரும்பக்கொடுப்பதற்குத் தேவன் அவருடைய அன்பை வெளிப்படுத்த தம்முடைய திட்டத்தைச் செயல்படுத்தினார்.

## தேவனுடைய திட்டத்தின் இரண்டாவது இரகசியம்

"கிறிஸ்துவை தலையாகக்கொண்டு, சகல சிருஷ்டிப்புகளையும் ஒன்று சேர்ப்பதற்கு," தேவனுடைய திட்டத்தில் பயன்படுத்தக்கூடிய ஒரு வகுப்பாரை முன்னதாக தேர்வு செய்து கிறிஸ்துவோடு இணைத்தார். எபேசியர் 1:4-5-ஆம் வசனங்களில் "நாம்" என்று அழைக்கப்படுகிறோம். இதுவே **இரண்டாம் இரகசியாகும்**. இதைக்குறித்து பவுல் கொலோசெயர் 1:25-27-ஆம் வசனங்களில் விவரிக்கிறார். "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய **பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய**

தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, உங்கள்பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்."

மனித இனத்தின் அங்கத்தினர்கள் இயேசுவின் வாழ்க்கையை மாதிரியாகக்கொண்டு நடப்பதும், இயேசு இந்த உலகத்திற்கு வந்த அதே நோக்கத்திற்காக தங்களை ஒப்புக்கொடுப்பதுமே - மனித இனம் பரிபூரண நிலைக்குத் திரும்பி தங்களுடைய சிருஷ்டிகரோடு இசைந்திருப்பது - இதுவே **இரண்டாம் இரகசியம்**. ஆயிர வருட ஆட்சியில், கிறிஸ்துவோடு கூட, மனித இனத்தின் ஒவ்வொரு நபரின் வாழ்க்கைகளை மாற்றி, நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்களாக அவர்களைத் தகுதிப்படுத்துவதற்கு இம்மாதிரியான வாழ்க்கை தனிப்பட்ட நபர்களைச் சரியாக ஆயத்தப்படுத்தும். சோதனைகளையும், பிரச்சனைகளையும் மேற்கொள்ளக்கூடிய ஜனங்கள், மற்றவர்கள் எதிர்நோக்கும் அதே சோதனைகளையும் பிரச்சனைகளையும் மேற்கொள்வதற்கு தக்க உதவிகளைச் செய்ய முடியும் என்று தேவன் அறிந்திருக்கிறார். தேவன் முடிவை துவக்கத்திலே கண்டதினால், அப்போஸ்தலனாகிய பவுலை அந்த **இரண்டாம் இரகசியத்தைப்** பற்றி எழுதும்படி தூண்டினார்.

"கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்."

"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம்பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத்தந்தருளவேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" (எபேசியர் 1:13-14, 16-19).

## கிறிஸ்துவை தரித்துக்கொள்ளுதல்

"என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்" (யோவான் 6:44). இராஜ்யத்தின் வேலைகளில், கிறிஸ்துவோடு இணைந்து செயல்பட விரும்புவோர், அவருடைய குமாரனுடைய மாதிரியை தங்களுடைய வாழ்க்கையில் பின்பற்றுவதற்கு பரலோக பிதாவினால் அழைப்பைப் பெறுகிறார்கள். "தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்" (1 தெசலோனிக்கேயர் 2:12).

தேவனுடைய அழைப்புக்குச் செவிகொடுப்பவர்கள், பரிசுத்த ஆவியினால், ஜெனிப்பிக்கப்பட்டு மகிமையான சுதந்தரத்தில் தேவனுக்குப் பிள்ளைகளாகவும், நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்கு சகோதரராகவும் இருக்கக்கூடிய ஒரு புதிய வாழ்க்கைக்கு வழி நடத்தப்படுவார்கள். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய **சுதந்தரத்திற்கேதுவாக**, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேதுரு 1:3-5).

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலாத்தியர் 3:26-27). நம்முடைய பாவங்களையும், பலவீனங்களையும் கிறிஸ்துவின் புண்ணியங்களினால் மூடி, அவரைப் போல குணங்களைத் தரித்துக்கொள்வதே நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்வது என்பதற்கான பொருளாகும். இது வாழ்நாள் முழுவதும் நம்முடைய குணங்கள் மறுரூபமாக்கப்படும். "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரண முமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2).

இந்த மனமாறுதலுக்கு நித்தியமான விடாமுயற்சி தேவைப்படுகிறது. "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (லூக்கா 9:23). "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்" (ரோமர் 2:6-7).

**சபைக்கு உண்டான இக்காலத்து சுதந்தரம்**

இயேசுவின் அடிச்சுவடுகளில் இப்போது நடக்கக்கூடிய கிறிஸ்துவின் சீஷர்களுக்கு ஐசுவரியமுள்ள சுதந்தரம் கொடுக்கப்படுகிறது. "இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காகவேண்டுதல்செய்கிறோம். ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர் களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோசெயர் 1:9-14).

இயேசுவின் சீஷர்கள், மகிழக்கூடிய இக்காலத்து சுதந்தரத்தின் பல அம்சங்களை, பவுல் இங்குக் குறிப்பிட்டிருக்கிறார். ஒன்று - ஜெபத்தின் மூலம் தேவனிடத்தில் தொடர்புகொள்வதாகும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலிப்பியர் 4:6-7).

தேவனோடும், அவருடைய குமாரனாகிய இயேசுவோடும் நெருங்கிய ஆவிக்குரிய ஐக்கியத்தில் நாம் பெறக்கூடிய சமாதானமும், மனநிறைவும், கிறிஸ்தவர்களுக்கு இக்கால சுதந்தரத்தின் மற்றொரு பகுதியாக இருக்கிறது. மனஷரின் இருதயங்கள் தோல்வி அடைவதற்குக் காரணமாக இருக்கும் பயங்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கும். நம்மைச் சுற்றி நடக்கக்கூடிய உபத்திரவங்களின் மத்தியில் நாம், "உன்னதமானவரின் மறைவில்" பாதுகாப்பாக இருக்கிறோம் (சங்கீதம் 91:1). இந்த உலகத்தில் இருக்கும் உபத்திரவத்திற்கு அப்பாற்பட்ட காரியங்களைச் சரியாகப் புரிந்துகொள்வதின் வழியாகப் பெரிதான சமாதானத்தைப் பெறலாம். இனி வரக்கூடிய காரியங்களைக்குறித்து பரிசுத்த ஆவி நம்மைப் புரிந்துகொள்ளுதலுக்கு வழி நடத்தும் என்று இயேசு வாக்களித்திருக்கிறார். "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 16:13).

நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டது என்ற முழுமையான நம்பிக்கையே, இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கும் சுதந்தரத்தின் மற்றொரு பங்காகும். "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன்

பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:1-2). நாம் யார் என்பதை அறிக்கையிடுவதில், இனி நாம் ஒருபோதும் வெட்கப்பட வேண்டியதில்லை. தேவன் நம்மை "புது சிருஷ்டிகளாக," தம்முடைய சொந்த பிள்ளைகளில் ஒருவராகவும் கருதுகிறார் (2 கொரிந்தியர் 5:17).

கிறிஸ்தவர்களின் இக்கால சுதந்தரத்தில் விசுவாசம் ஒரு பகுதியாக இருக்கிறது. இயற்கையான ஐம்புலன்களால் கண்டுபிடிக்க முடியாத தேவனுடைய காரியங்களை விசுவாசம் என்ற ஆறாவது புலனால், உறுதியோடு அறிந்துகொள்ளலாம். "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரெயர் 11:1). தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு அவருடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மற்ற ஆவியின் கனிகளோடு (கலாத்தியர் 5:22-23) விசுவாசம் நமக்கு உதவிசெய்கிறது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" ( எபிரெயர் 11:6).

### தேவனுடைய இராஜ்யத்தில் - சபை வருங்காலத்தில் பெறக்கூடிய சுதந்தரம்

இந்தச் சுவிசேஷ யுகத்தில், விசவாசத்தோடு ஜெயம் பெற்றவர்களுக்கு தேவன் கொடுக்கக்கூடிய சுதந்தரம்,கற்பனைக்கு எட்டாதது. "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலேநமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:3-4).

வெளிப்படுத்தலில் ஏழு சபைகளுக்குக் கொடுக்கப்பட்ட செய்திகளில் வருங்காலத்தில் கிறிஸ்தவர்களின் தந்திரத்தைக்குறித்த காரியங்கள் வாக்குத்தத்தங்களாக விவரிக்கப்பட்டுள்ளது -

* **எபேசு** - ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்பதற்கான உரிமை (வெளிப்படுத்தல் 2:7).

* **சிமிர்னா** - இரண்டாம் மரணம் இவர்களை மேற்கொள்வதில்லை (வெளிப்படுத்தல் 2:11).

***பெர்கமு** - மறைவான (அழியாமை) மன்னாவையும், வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தைப் பெறுவார்கள் (வெளி 2-17).

***தியத்தீரா** - இரும்பு கோலினால் (மேய்ப்பர்களுக்குரிய கோல்) ஜனங்களை ஆட்சிசெய்யும் அதிகாரம் பெறுவார்கள். அவர்கள் விடிவெள்ளி நட்சத்திரத்தையும் பெறுவார்கள் (வெளிப்படுத்தல் 2:26-28).

***சர்தை** - வெண்வஸ்திரங்களைத் தரித்தவர்களாய் இவர்களின் பெயர்களை, இயேசு தேவனுக்கு முன்பாகவும் தூதர்களுக்கு முன்பாகவும் அறிக்கை செய்வார் (வெளிப்படுத்தல் 3:5).

***பிலதெல்பியா** - ஜெயங்கொள்ளுகிறவர்கள் தேவனுடைய ஆலயத்தில் தூணாக இருப்பார்கள். அவர்கள் அங்கே நிலைத்திருப்பார்கள். என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் (வெளிப்படுத்தல் 3:12).

***லவோதிக்கேயா** - இயேசு பிதாவின் சிங்காசனத்தில் அமர்ந்திருப்பது போல, இவர்கள் குமாரனுடைய சிங்காசனத்தில் அமருவார்கள் (வெளிப்படுத்தல் 3:21).

"மணவாட்டி, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி" என்று பரலோக சபையை வசனங்கள் அடையாளப்படுத்துகிறது (வெளிப்படுத்தல் 21:9-23). மற்றும், "பரலோகத்தில் பேரெழுதப்பட்ட முதற்பலன்" ஆவார்கள் (எபிரெயர் 12:23). நித்திய ஜீவனைப் பெறுவதற்குப் பாத்திரவான்களை இவர்கள் கிறிஸ்துவோடு உதவி செய்யவார்கள். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?" (1 கொரிந்தியர் 6:2).

ஒரு காலபகுதிக்குள், மனுக்குலம், சரியான காரியங்களைச் செய்வதற்குக்

கற்றுக்கொடுக்கப்படும். அதற்குப் பின் அவர்களின் முன்னேற்றம் மதிப்பிடப்படும். இவைகள் நியாயத்தீர்ப்புக்குள் அடங்கும்."என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதி காலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்" (ஏசாயா 26:9).

வேதாகமத்தைப் பொறுத்தவரையில், "நியாயத்தீர்ப்பின் நாள்" என்பது 24 மணி நேரத்தில், தீர்ப்புகளை அறிவிக்கக்கூடிய காலபகுதியல்ல. அதற்குப் பதிலாக, இது ஆயிர வருடங்களைக்கொண்ட கால பகுதியாகும். இதில், ஒருவரோடு ஒருவர் இசைந்து சமாதானமாகவும், நீதியுள்ள வாழ்க்கையை மனுக்குலம் வாழ்வதற்கு, கிறிஸ்துவும் சபையும் கற்றுக்கொடுப்பார்கள். இந்த வேலை சபையின் வருங்கால சுதந்தரத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. இந்த உலகத்தை நீதியில் பயிற்சிவிக்க, கிறிஸ்துவுக்கு உதவியாளராக இருப்பார்கள். சரியான ஒழுக்கத்தை மட்டும் அல்ல, இதுவே, சரியான ஒழுக்கம் என்பதன் காரணத்தையும் கற்றுக்கொடுப்பார்கள். இப்படிப்பட்ட நல்லொழுக்கத்தை, மனுக்குலம் செயல்முறைப் படுத்துவதற்கு சபை உதவி செய்து, அவர்களின் முன்னேற்றத்தை மதிப்பிட்டு, இறுதியில், அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதற்கு முடிவுகளையும் எடுப்பார்கள் மனுஷர் அன்போடும், இரக்கத்தோடும் அனைவரோடும் நடந்துகொள்ள கற்றுக்கொண்டிருக்கிறார்களா என்ற அடிப்படையில் முடிவு எடுக்கப்படும் (மத்தேயு 25:31-46).

### ஒரு இராஜரீகமான ஆசாரியத்துவம்

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்தஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், **ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும்**, பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:5, 9-10).

இராஜரிகமான ஆசரியத்துவமாக மாறுவதும், சபையின் வருங்கால சுதந்தரத்தின் ஒரு பகுதியாக உள்ளது. இஸ்ரயேலில், ஒரு ஆசாரியன் தனிப்பட்ட நபராக மதரீதியான சடங்குகளை நடப்பித்து, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக செயல்பட்டார். ஜனங்களை மறுபடியும் தேனோடு இசைந்திருக்கச் செய்வதே ஆசாரியத்துவத்தின் இறுதி இலக்காகும் - பரிபூரணம் (எபிரெயர் 7:11).

இப்போது இயேசு, சபைக்கும், அவருடைய இராஜ்யத்தில் இந்த உலகத்திற்கும், பிரதான ஆசாரியராக இருப்பார். கிறிஸ்துவின் சரீரமாக இருக்கும் சபை இந்த வேலைகளில், இயேசுவுக்கு ஆசாரியர்களாக இருப்பார்கள். "தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்" (வெளிப்படுத்தல் 5:9-10) என்று சபை கூறுவதாக யோவான் எழுதுகிறார்.

"முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளிப்படுத்தல் 20:4-6) என்று யோவான் விவரிக்கிறார்.

"அன்றியும், மனுஷரில் தெரிந்துகொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காகத் தேவகாரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான். தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான். அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிடவேண்டியதுபோல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டியதாயிருக்கிறது. மேலும், ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை" (எபிரெயர் 5:1-4). அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும்

இரக்கம் காண்பிப்பதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட பலவீனங்களை மேற்கொள்வதில் நாமும் அனுபவம் பெற்றிருப்பதினால், நாம் இதை எளிதாக செய்யலாம். ஆகவே, நாம் அவர்களின் நிலையைப் புரிந்துகொள்ள முடியும். உலகம், மாம்சம் மற்றும் சாத்தானின் வழியாக வரும் சோதனைகளையும் பலவீனங்களையும் மேற்கொள்வதற்காக போராடும் நம்முடைய இக்காலத்துப் போராட்டங்களுக்கும் அனுபவங்களுக்கும் உண்மையில் இலாபகரமான நோக்கம் இருப்பதை இக்காரியம் பொருள் படுத்துகிறது.


**முடிவுரை**

பாவத்தைப் போக்குதல், ஈடுபலி, இரட்சிப்பு மற்றும் நம்முடைய இனம் இழந்து போனதைத் திரும்பக் கொடுப்பதற்கு தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். மரித்தோரிலிருந்து மனுக்குலத்தை எழுப்புவதற்கு, கிறிஸ்துவை பிரதான ஆசாரியனாக முதலில் பாவத்தைப் போக்குவதற்கான அவருடைய பலியின் புண்ணியங்களைப் பயன்படுத்துவதற்கு வேதன் திட்டம் வகுத்தார். அதற்குப் பின் அவரோடு சபையும், இராஜரிகமான ஆசாரியத்துவத்தின் ஒரு பகுதியாக, மனுக்குலம் தேவனோடு இசைந்திருப்பதற்கும், பரிபூரணத்திற்கு மீண்டும் திருப்பி, பாவத்தில் வியாதியாக இருக்கும் மனித இருதயங்களை மாற்றுவதற்கும் உதவி செய்வார்கள். "கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்; சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்" (சங்கீதம் 149: 4).

இந்நேரத்தில், கிறிஸ்துவின் சீஷர்கள், நெறிதப்பிப் போனவர்களை கனிவோடும் இரக்கத்தோடும் நடத்துவதற்கும், ஆசாரியர்களாக மாறுவதற்குப் பயிற்சி பெற்றுக் கொண்டிருக் கிறார்கள். நம்முடைய பிரதான ஆசாரியராகிய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் கீழ்ப் பணி புரிவதற்குத் தேவையான திறமைகள் மற்றும் குணங்களை வளர்ச்சியடைவதற்கு நாம் வைராக்கியமாக கிரியை செய்துகொண்டிருக் கிறோம் என்பதை பரலோகத்தின் தேவனுக்கு வெளிப்படுத்தும் படியாக, கிடைக்கக்கூடிய ஒவ்வொரு வாய்ப்புகளையும் பயன்படுத்துவோமாக.

இஸ்ரயேலின் வருங்கால சுதந்தரம்

# இவர்கள் என் ஜனம்




"நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரேமியா 31:34).

Jeff Earl

நீண்ட கால தண்டனைக்குப் பின் தேவனுடைய கிருபையை இஸ்ரயேல், மீண்டும் பெறுவதற்கான அடையாளங்கள் 1878-ஆம் வருடம் பெட்டாடிக்குவா ஒப்பந்தம் ஸ்தாபித்ததிலிருந்து துவங்கியது. "அவளுடைய பாவங்கள் அனைத்திற்கும் இரட்டிப்பான" தேவனுடைய தண்டனையின் முடிவை இது வெளிப்படுத்தியது (ஏசாயா 40:2). மீண்டும் யூதர்கள் இஸ்ரயேலில் கூட்டிச் சேர்க்கப்படுவதை, 1917-ஆம் வருடம் அறிவிக்கப்பட்ட பால்பர் பிரகடனம் ஒரு நினைவுகூருதலான சம்பவமாக இருந்தது. அதற்குப் பின் யூதர்கள் இஸ்ரயேலில் நிலங்களை விலைக்கு வாங்கினார்கள். ஆனாலும் பெரும்பாலான யூதர்கள் திரும்பிப் போகவில்லை. யூதர்கள் இஸ்ரயேல் தேசத்திற்குச் செல்வதற்கான இறுதி எச்சரிப்பாக, 1930-ஆம் வருடத்தின் துவக்கத்தில், துவங்கின ஜெர்மானிய உபத்திரவம் 1938 -ஆம் வருடம் முடிந்தது (எரேமியா 16:16).

ஆயினும், அந்த எச்சரிப்பை ஏற்றுக்கொள்ளாத மில்லியன் கணக்கான ஐரோப்பிய யூதர்கள் அந்தப் பேராபத்தில் தங்களுடைய ஜீவனை இழந்தார்கள். இரண்டாம் உலகப்போரில் தப்பித்தவர்கள் இஸ்ரயேலுக்குக் குடிபெயர்ந்தார்கள். 1948-ஆம் வருடம் அரபியாவிலிருந்தும், 1980-ஆம் வருடம் இறுதியிலும், 1990-ஆம் வருடத்தின் துவக்கத்திலும் ரஷ்யாவிலிருந்தும், யூதர்கள் வெளியேற்றப்பட்டதிலிருந்து, இஸ்ரயேலில் இவர்கள் அனைவரும் மறுபடியும் கூட்டிச்சேர்க்கப்படத் துவங்கினார்கள். மேலும் 1985-ஆம் வருடம் சூடானிலிருந்தும் எத்தியோப்பிய யூதர்களும் 1991-இல் எத்தியோப்பியாவிலிருந்தும், யூதர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

**1. பாரா**

யூதர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு இடையில் எருசலேமைக் கைப்பற்றுவதற்கான யுத்தம் "இதோ, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் நான் எருசலேமைத் தத்தளிப்பின் பாத்திரமாக்குகிறேன்; எருசலேமுக்கு விரோதமாய்ப் போடப்படும் முற்றிகையிலே யூதாவும் அப்படியேயாகும். அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள்" (சகரியா 12:2-3). சில யூதர்கள் கிறிஸ்தவர்களும் அந்த மலையிலுள்ள ஆலயத்தில் ஜெபிக்க விரும்புவதை இஸ்லாமியர்கள் வன்மையாக எதிர்க்கிறார்கள். கோகு மற்றும் மாகோகின் படையெடுப்பதற்கு முன் இஸ்ரயேல் மற்றொரு யுத்தம் எருசலேமுக்காக துவங்கும் என்று நாம் எதர்பார்க்கிறோம்.

உலகமெங்குமுள்ள, யூதர்கள் கடந்த காலத்திலும், நிகழ் காலத்திலும், வருங்காலத்திலும் கூட்டிச் சேர்க்கப்படுவதைக்குறித்து பழைய ஏற்பாட்டில் பல வசனங்கள் பேசுகிறது. இவைகள் இக்காலத்திலும், வருங்காலத்திலும் பெறக்கூடிய மிகுதியான ஆசீர்வாதங்களைக்குறித்துப் பேசுகிறது. (இவர்களைத் தொடர்ந்து மீதியுள்ள மனுக்குலம் ஆசீர்வதிக்கப்படும்) பழைய ஏற்பாட்டில் வருங்கால சுதந்தரத்தை, விவரிக்கக்கூடிய மூன்று பகுதிகளை நாம் மையப்படுத்தலாம். அதற்குப் பின் புதிய ஏற்பாட்டில் எபிரெயர், அப்போஸ்தலர் மற்றும் ரோமர்களுக்கு எழுதின நிருபத்திலிருக்கும் பகுதிகளைப் பார்க்கலாம்.

**தேசத்தில் குடியிருப்பு, வருங்கால செல்வசெழிப்பு(எசேக்கியேல் 34 : 11-31)**

இஸ்ரயேல் கூட்டிச்சேர்க்கப்படுவதிலிருந்து (1878 துவங்கி) இராஜ்யத்தில், தங்களுடைய தேசத்தில் வளமாக முன்னேறும் வரைக்குமுள்ள கால பகுதியை எசேக்கியேல் 34-ஆம் அதிகாரம் முழுமையாகக் கூறுகிறது. "ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறதுபோல, நான் என் ஆடுகளைத்தேடி, மப்பும் மந்தாரமுமான நாளிலே அவைகள் சிதறுண்டுபோன எல்லா இடங்களிலுமிருந்து அவைகளைத் தப்பிவரப்பண்ணி, அவைகளை ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும் தேசங்களிலிருந்து சேரவும்பண்ணி, அவைகளுடைய சுயதேசத்திலே அவைகளைக் கொண்டுவந்து, இஸ்ரவேல் மலைகளின்மேலும் ஆறுகள் அண்டையிலும் தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் அவைகளை மேய்ப்பேன்" (12-

13 வசனங்கள்). அர்மெகதோனுக்கு முன் உலகத்திலுள்ள அனைத்து யூதர்களையும் தேவன் தேடுவார் என்பதை வசனங்கள் காட்டுகிறது. இஸ்ரயேலர்களை அவர்கள் தேவனிடத்திற்கு மீண்டும் அழைத்துவருவதே இந்த வாக்குத்தத்தமாகும் (எரேமியா 30:3).

வசனம்14("அவைகளை நல்ல மேய்ச்சலிலே மேய்ப்பேன்; இஸ்ரவேலுடைய உயர்ந்த மலைகளில் அவைகளுடைய தொழுவம் இருக்கும்; அங்கே அவைகள் நல்ல தொழுவத்தில் படுத்துக்கொள்ளும், இஸ்ரவேலின் மலைகளின்மேல் நல்ல மேய்ச்சலை மேயும்.") அர்மெகதோனுக்குப் பின் நடக்கக்கூடிய காரியமாகத் தோன்றுகிறது. சமமான நிலங்களின் நல்ல மேய்ச்சலை காணலாம். ஆனால் தேவனுடைய இராஜ்யத்தில், மலைகளிலும், இவைகளை காணலாம். "நான் காணாமற்போனதைத்தேடி, துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன்; நியாயத்துக்குத்தக்கதாய் அவைகளை மேய்த்து, புஷ்டியும் பெலமுமுள்ளவைகளை அழிப்பேன்" (வசனம் 16). யாக்கோபின் உபத்திரவத்தில் தாழ்மையுள்ளவர்கள் மட்டுமே விடுவிக்கப்படுவார்கள் என்று இந்த வசனம் கூறுகிறது. தங்களைப் பலவான்களாகவும், சுய திருப்தியுள்ளவர்கள் என்று தங்களை எண்ணுபவர்கள் தேவனால் எதிர்பார்க்கும் தாழ்மையுள்ளவர்கள் அல்ல.

"இதோ, ஆட்டுக்கும் ஆட்டுக்கும், ஆட்டுக்கடாக்களுக்கும், வெள்ளாட்டுக் கடாக்களுக்கும் நான் நியாயந்தீர்ப்பேன். நீங்கள் நல்ல மேய்ச்சலை மேய்ந்து, உங்கள் மேய்ச்சல்களில் மீதியானதை உங்கள் கால்களால் மிதிக்கலாமா? தெளிந்த தண்ணீரைக் குடித்து, மீதியாயிருக்கிறதை உங்கள் கால்களால் குழப்பிப்போடலாமா? என் ஆடுகள் உங்கள் கால்களால் மிதிக்கப்பட்டதை மேயவும், உங்கள் கால்களால் குழப்பப்பட்டதைக் குடிக்கவும் வேண்டுமோ?" (வசனம் 17-19). வல்லமையுள்ளவர்களையும் பலவீனரையும் வேறுபடுத்தி காண்பிக்கிறது. யாக்கோபின் உபத்திரவத்திற்குப் பின் மீதியுள்ள பரிசுத்த இஸ்ரயேல் ஜனங்கள் மீண்டும் கூட்டிச்சேர்ப்பதை இந்த வசனம் கூறுகிறது. உபத்திரவ காலத்தின்போது, யார் அதில் மீதியிருப்பவர்கள் என்ற தீர்ப்பின் பலன்கள்களைக் குறித்தும் ஏசாயா 4:2-4-ஆம் வசனங்களில் விவாதிக்கப்படுகிறது. "இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு அந்நாளிலே கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும்; பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும். அப்பொழுது ஆண்டவர், சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவி, நியாயத்தின் ஆவியினாலும், சுட்டெரிப்பின் ஆவியினாலும், எருசலேமின் இரத்தப்பழிகளை அதின் நடுவிலிருந்து நீக்கிவிடும்போது, சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான்."

மிகப் பெரிய மேய்ப்பரும், பிரபுவாகிய இயேசு கிறிஸ்துவும் மீண்டும் இஸ்ரயேலை சீர்பொருத்துவதைக் குறித்து 23-24 வசனங்கள் விவரிக்கிறது. அதற்குப் பின் இஸ்ரயேலோடு ஏற்படுத்தப்படும் சமாதான உடன்படிக்கையைக் குறித்து, 25-ஆம் வசனம் குறிப்பிடுகிறது. காட்டு மிருகங்களை அடையாளமாக எடுத்துக்கொண்டால், அவர்களைச் சுற்றியிருக்கும் எதிராளிகளாக இருக்க வேண்டும். "மிருகங்கள்" என்பதைச் சொல்லர்த்தமாக எடுத்துக்கொண்டால் ஓநாய் ஆட்டுக்குட்டியோடு தங்கும் என்று மற்ற வசனங்களும் கூறுகிறது.

"நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்" (வசனம்26). மற்றும் "வெளியின் விருட்சங்கள் தங்கள் கனியைத்தரும்; பூமி தன் பலனைக் கொடுக்கும்; அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாயிருப்பார்கள்; நான் அவர்கள் நுகத்தின் கயிறுகளை அறுத்து, அவர்களை அடிமைகொண்டவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்" (வசனம் 27). இப்படியாக தேசமும் வனாந்தரமும் பூத்து செழிப்பதற்கு மழை ஒரு விசேஷித்த ஆசர்வாதமாக இருக்கும்.

இறுதியாக, "தங்கள் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் தங்களோடே இருக்கிறதையும், இஸ்ரவேல் வம்சத்தாராகிய தாங்கள் என் ஜனமாயிருக்கிறதையும், அவர்கள் அறிந்துகொள்வார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" என்று 30-ஆம் வசனம் கூறுகிறது. இக்காரியங்கள் ஏசாயா 11 மற்றும் 35-ஆம் அதிகாரத்தில் தாராளமாக விவரிக்கப்பட்டுள்ளது. இஸ்ரயேலின் தேவனுடைய ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்தத் தேசமானாலும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படும். "அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்;

ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்" (சகரியா 8:23). புதிய உடன்படிக்கை நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையைப் போல இஸ்ரயேல் மற்றும் மிச்சம் இருக்கும் மனுக்குலம் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள்.

### புதிய உடன்படிக்கையின் கீழ், இஸ்ரவேல் கூட்டி சேர்க்கப்படுதல் (எரேமியா 31:1-40)

சுவிசேஷ யுகம் முடிவு, துவங்கி தேவனுடைய இராஜ்யத்திற்குள் வரைக்கும், உலகத்தின் எல்லா பகுதிகளிலும் இருக்கும் இஸ்ரயேலர்கள் மீண்டும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் என்று இந்த அதிகாரம் பேசுகிறது. 1878-ஆம் வருடத்திலிருந்து கூட்டிச்சேர்க்கக்கூடிய காரியம் ஒரு சிறிதளவில் தொடர்ந்துகொண்டிருக்கிறது. (ஆனால் பொருளாதார வீழ்ச்சியுடன் துரிதமாக அதிகரிக்கலாம்.) யாக்கோபின் உபத்திரவ காலத்திற்குப் பின் இரண்டாம் தரம் ஒரு குடிபெயர்தல் நடைபெறும். "நான் அவர்களை எகிப்துதேசத்திலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களை அசீரியாவிலிருந்து கூட்டிக்கொண்டு, அவர்களைக் கீலேயாத்தேசத்துக்கும் லீபனோனுக்கும் வரப்பண்ணுவேன்; அவர்களுக்கு இடம் போதாமற்போகும்" (சகரியா 10:10). "அக்காலத்திலே நான் இஸ்ரவேலின் வம்சங்களுக்கெல்லாம் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (வசனம் -1). இது அர்மெகதோனுக்குப் பின் குறிப்பிடப்படும் காலமாகத் தோன்றுகிறது. இஸ்ரயேலின் அனைத்து குடும்பங்களும் (யூதா மற்றும் பென்யமின் மட்டுமல்ல) அவருடைய ஜனங்கள் மேலும் 6 மற்றும் 9-ஆம் வசனங்களில் இது உறுதிப்படுத்தப்படுகிறது.

எருசலேம் உலகத்தின் தலை நகரமாக இருக்கும் என்று 6-ஆம் வசனம் காட்டுகிறது. இராஜ்யத்தில் சபை பரலோக ஆட்சியாளர்களாகவும், முற்பிதாக்கள் மற்றும் மீதியுள்ள பரிசுத்தவான்கள் (அர்மெகதோனுக்குப் பின்) பூமியில் இருப்பார்கள் (ஏசாயா 4:2-4; எசேக்கியேல் 20:37-38).

"இதோ, நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி, அவர்களைப் பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டிவருவேன்; குருடரும், சப்பாணிகளும், கர்ப்பவதிகளும், பிள்ளைத்தாச்சிகளுங்கூட அவர்களில் இருப்பார்கள்; மகா கூட்டமாய் இவ்விடத்துக்குத் திரும்புவார்கள்" (வசனம் 8). இரண்டாவது முறையாக ரஷ்யாவிலிருந்தும் மற்றும் உலகத்தின் மற்ற தேசங்களிலிருந்தும் யூதர்கள் தேசம் திரும்புவார்கள் என்று 8-ஆம் வசனம் கருதுகிறது. அர்மெகதோனுக்குப் பின் மீதியிருப்பவர்களைக் காட்டிலும் இவர்கள் எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருக்கக் கூடும். மேலும் இதில் அசீரியர்களால் எடுத்துச் செல்லப்பட்ட 10 கோத்திரங்களும், பாபிலோனியர்களாக எடுத்துச் செல்லப்பட்ட 2 கோத்திரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

"இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்" என்று 9-ஆம் வசனம் கூறுகிறது. இஸ்ரயேல் கோத்திரங்களில் பத்து கோத்திரங்கள் எப்பிராயீமில் ஆட்சி செய்து வந்ததினால், எபிராயீம் 10 கோத்திரத்தை அடையாளப்படுத்துகிறது. யூதா மற்றும் இஸ்ராயேலின் 10 கோத்திரங்களுக்கும் எரேமியா ஊழியம் செய்தார் ஏசாயா 11:12-13 ("எப்பிராயீம் யூதாவின்மேல் பொறாமையாயிரான், யூதா எப்பிராயீமைத் துன்பப்படுத்தான்.") 10 கோத்திரங்களுக்கும், இரண்டு கோத்திரங்களுக்கும் இருக்கும் விரோதங்கள் இராஜ்யத்தில் மறைந்து போய்விடும். இனி ஒருபோதும் அது காணப்படுவதில்லை என்று இந்த வசனம் பேசுகிறது.

தேவனே அவர்களைச் சிதறடித்து கூட்டிச் சேர்த்தவர் என்பதை 10-ஆம் வசனம் காட்டுகிறது. அர்மெகதோன் யுத்தத்தில் இஸ்ரயேலில் மிச்சம் இருக்கும் பரிசுத்தவான்களை ஆண்டவர் அற்புதவிதமாக விடுவிக்கும்போது கோகினிடமிருந்து யாக்கோபு மீட்கப்படுவார் (வசனம் 11).

"ராகேல் தன்னுடைய மரித்துப்போன பிள்ளைகளுக்காக அழுவதைக்" குறித்து 15 மற்றும் 16-ஆம் வசனங்கள் பேசுகிறது. ராகேல் யோசேப்புக்கும் பென்யமினுக்கும் தாயாக இருந்தாள். 15-ஆம் வசனம், மத்தேயு 2:17-18-ஆம் வசனங்களில் மேற்கோள் காட்டப்பட்டு,16-ஆம் வசனம், சத்துருக்களின் தேசத்திலிருந்து வரும் மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றி விவரிக்கிறது. "சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள்" (மரணம்). மனம் வருந்தும்போது, எபிராயீம் ஒரு அன்பான மகனாக மாறினார், தேவன் அவர்மேல் இரக்கம் வைத்து அவரை மீண்டும் நினைவுக் கூறினார் (வசனம் 20).

"அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்" (வசனம் 30). தேவனுடைய இராஜ்யத்தில்,

பிதாக்களின் (ஆதாம்) பாவங்கள் தங்களுடைய பிள்ளைகளைச் சேராது என்று இந்த வசனத்தில் விவரிக்கப்படுகிறது. அதற்குப்பதிலாக, பாவம் செய்பவர்களே, அதற்குரிய பொறுப்பாளிகளாகவும், அதற்குரிய தண்டனையைப் பெறக்கூடியவர் களாகவும், இருப்பார்கள். இராஜ்யத்தில் மரணமும் (இரண்டாம் மரணம்) சம்பவிக்கும் என்று இது காட்டுகிறது.

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்" (வசனம் 31). யூதா மற்றும் பத்து இஸ்ரயேல் கோத்திரத்தோடும், பழைய நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைக்குப் பதிலாக, புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படும் என்று வெளிப்படுத்தப்படுகிறது. நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் போல் இராமல் இந்த உடன்படிக்கைக்கு மடிவில்லாததினால், இது "நித்திய உடன்படிக்கை" என்று அழைக்கப்படுகிறது. தம்முடைய தேவனிடத்தில் இராஜ்யத்தை ஒப்புக்கொடுக்கும் வரையில், அந்த 1000 வருஷமளவும், புதிய உடன்படிக்கைக்கு கிறிஸ்துவே மத்தியஸ்தராக இருப்பார். சபை அல்லது சிறுமந்தை புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாக இருப்பார்கள். எல்லா ஆசீர்வாதங்களும் முதலில் இஸ்ரயேலை சென்றடையும். இந்த உலகத்தில் மீதியுள்ள தேசங்கள், இஸ்ரயேலின் "குமாரத்திகளாக" ஆசீர்வதிக்கப்படுவார்கள் (எசேக்கியேல் 16:61).

நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையைக் காட்டிலும், புதிய உடன்படிக்கை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படியாக இருக்கும் என்று 33-ஆம் வசனம் காட்டுகிறது. அவர்கள் இதை மறக்காதபடிக்கு இது அவர்களின் மனதில், மிக ஆழமாக பதிக்கப்பட்டிருக்கும். எசேக்கியேல் 36:25-27-ஆம் வசனங்கள் அதே வார்த்தைகளோடு, "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிடுவேன்" என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த உலகமும், இஸ்ரயேலின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

"இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: "கர்த்தரை அறிந்துகொள்" என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள்" (வசனம் 34). இவ்வசனம் இஸ்ரயேலுக்கு மட்டுமல்ல, முழு மனுக்குலத்திற்கும் பொருந்தும். இராஜ்யத்தில் கிறிஸ்துவின் ஆளுகை, திரும்பக்கொடுத்தல் மற்றும் உயிர்த்தெழுதலின் விளைவுகளை அனைவரும் காண்பார்கள். "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா 11:9) என்று ஏசாயா கூறுகிறார். இராஜ்யத்தில் சாத்தான் கட்டப்பட்டிருப்பதினாலும், அறிவு பெருகியிருப்பதி னாலும் பாவம் செய்பவர்களுக்கு எந்த மன்னிப்பும் கிடையாது.

35-37-ஆம் வசனங்களில், தேவன் இயற்கையின்மேல் அவர் கொண்டுள்ள கட்டுப் பாட்டையும், இஸ்ரயேலின்மேல் அவர் வைத்திருக்கும் கட்டுப்பாட்டையும் ஒப்பிட்டுப் பேசுகிறார். சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், "அப்பொழுது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார்." தேவன் இயற்கையை முழுமையாகக் கட்டுப்படுத்துகிறபடியினால், இஸ்ரயேல் ஜாதி ஒரு தேசமாக இராதபடிக்கு அற்றுபோவதில்லை.

இறுதியாக, அர்மெகதோனுக்குப் பின் எருசலேம் மீண்டும் கட்டப்படுதலைக்குறித்து 38-40 வசனங்கள் பேசுகிறது. இனி எருசலேம் ஒருபோதும், "பிடுங்கப்படுவதுமில்லை இடிக்கப்படுவதுமில்லை என்கிறார்."

### வருங்காலத்தில் இஸ்ரயேலின் எல்லைகள் (எசேக்கியேல் 47:13-21)

இஸ்ரயேலின் வருங்கால எல்லைகளைக் குறித்து எசேக்கியேல் 47:13-21-ஆம் வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. வட திசையுள்ள எல்லை 15-17 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. "தேசத்தின் எல்லையாவது: வடபுறம் பெரிய சமுத்திரந்துவக்கி, சேதாதுக்குப் போகிற எத்லோன் வழியாயிருக்கிற, ஆமாத்தும், பேரொத்தாவும், தமஸ்குவின் எல்லைக்கும் ஆமாத்தின் எல்லைக்கும் நடுவான சிப்ராயிமும், ஆப்ரானின் எல்லையோடே சேர்ந்த ஆத்சார் அத்தீகோனுமானது. அப்படியே சமுத்திரத்திலிருந்து போகிறஎல்லை ஆத்சார் ஏனானும், தமஸ்குவின் எல்லையும், வடமூலையான வடக்கும் ஆமாத்தின் எல்லையுமானது; இதுவடபுறம்." ஹமாத் (யோசுவா கைப்பற்றின லீபனோன் மற்றும் சாலொமோன் ஆட்சியின் கீழ் உள்ள எல்லை) ஹம்மா என்ற நவீன பட்டணம் இதுவே. இது தமஸ்குவின் வடக்கில் 120 மைல் தூரமும், மேற்கு மத்திய சிரியாவில் மத்திய தரைகடலிலிருந்து 50

மைல் தூரத்திலும் உள்ளது. கிரேக்கம் மற்றும் ரோமர்களின் காலத்திலும் இது எப்பிஙபானியா என்று அழைக்கப்பட்டது. பால்மைரா தமஸ்குவிலிருந்து 130 மைல் வடகிழக்கில் உள்ளது.

கிழக்கு எல்லை, "கீழ்ப்புறத்தை ஆப்ரானுக்கும் தமஸ்குவுக்கும் நடுவாகவும், கீலேயாத்துக்கும் யோர்தானின் ஓரமான இஸ்ரவேல் தேசத்துக்கும் நடுவாகவும் கீழ்க்கடல்மட்டும் இருக்கும் எல்லையாய் அளப்பீர்களாக; இது கீழ்ப்புறம்" (வசனம் 18). வருங்காலத்தில், "தமஸ்குவானது நகரமாயிராமல் தள்ளப்பட்டு, பாழான மண்மேடாகும்." மற்றும் "ஆரோவேரின் பட்டணங்கள் பாழாய் விடப்பட்டு, மந்தைகளின் வெளியாயிருக்கும்; மிரட்டுவாரில்லாமல் அவைகள் அங்கே படுத்துக்கொள்ளும்" (ஏசாயா 17:1-2). தமஸ்குவுக்கு அருகிலுள்ள யார்முக்கு மற்றும் தமஸ்குவிலுள்ள சில இடங்கள், இப்போது சிரியா அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டு வருகிறது.

தெற்கு எல்லை, "தென்மூலையான தென்புறம் தாமார்துவக்கி, காதேசிலுள்ள சண்டைமூட்டுதலின் தண்ணீர்கள்மட்டாகவும் ஆறுமட்டாகவும், பெரியசமுத்திரமட்டாகவும் இருப்பது; இது தென்மூலையான தென்புறம்" (வசனம் 19). தென் திசையிலுள்ள எகிப்தின் கால்வாய்க்கு வட திசையிலுள்ள சீனாயின் ஒரு சிறிய பகுதியும், மேரிமாகாதேஷின் தென் திசையிலுள்ள ஒரு சிறிய பகுதி எகிப்தின் கட்டுபாட்டிலுள்ளது. சமீபத்தில், இஸ்லாமிய தீவிரவாதிகள் புரட்சியினால் பல எதிப்து இராணுவ வீரர்களையும், காவல் துறையினரையும் கொன்றுபோட்டார்கள்.

மேற்கு எல்லை, "மேற்புறம் அந்த எல்லைதுவக்கி ஆமாத்துக்கு எதிராக வந்து சேருமட்டும் இருக்கிற பெரிய சமுத்திரமே; இது மேற்புறம்" (வசனம் 20). இந்த மேற்கு எல்லை தெற்கு காசாவோடும், மத்திய தரை கடலோடும், ஹம்மாவோடும் இணைந்து வருகிறது. தற்போது, இந்த எல்லை ஹம்மாஸ் மற்றும் ஹெஸ்போலாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. இருவருமே, இஸ்ரயேலுக்கு எதிராளிகள்.

இஸ்ரயேலின் வருங்கால எல்லைகளிலுள்ள பட்டணங்கள் இப்போது அல்லது வருங்காலத்தில் அழிக்கப்படும் என்று தோன்றுகிறது. இஸ்ரயேலின் எல்லைகள் விரிவாக்கப்படுவதற்கு முன்னதாக - சிரியா அராசங்கத்தினால் (1**பாரா)**
ஆதியாகமம் 15:18 போன்ற மற்ற வசனங்கள் இஸ்ரயேலின் (அரபு தேசங்களோடு) சுதந்தரம் வடதிசை ஐபிராத் நதி வரையிலும் என்று விவரிக்கப்படுகிறது. "அக்காலத்திலே எகிப்திலிருந்து அசீரியாவுக்குப் போகிறபெரும்பாதை உண்டாயிருக்கும்; அசீரியர் எகிப்துக்கும், எகிப்தியர் அசீரியாவுக்கும் வந்து, எகிப்தியர் அசீரியரோடுங்கூட ஆராதனை செய்வார்கள். அக்காலத்திலே இஸ்ரவேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாகப் பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும்" (ஏசாயா 19:23-24). சிரியா மற்றும் எகிப்திக்கும் இடையிலுள்ள இஸ்ரயேலின் வழியாக ஒரு பெரும்பாதையைப் பற்றி விவரிக்கிறது. ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தின் விரிவாக்கம் அரபியர்களுக்குமா ? இருக்கலாம்!

## புதிய ஏற்பாட்டில் இஸ்ரயேலின் திரும்பக்கொடுத்தல்

மாம்ச இஸ்ரயேலர்களின் திரும்பக்கொடுத் தலைக்குறித்து எபிரெயர், அப்போஸ்தலர்கள் மற்றும் ரோமர் எழுதின நிருபங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காரியத் தைத் தொடர்ந்து பூமியிலுள்ள மிச்சமுள்ள மனுக்குலம் சீர்பொருத்தப்படுவார்கள். இதைப், "புதிய வானம் மற்றும் புதிய பூமி" என்றும் "புதிய எருசலேம்" என்றும் வெளிப்படுத்தல் 21:1-2-ஆம் வசனங்களில் விவிரிக்கப்பட்டுள்ளது."

"ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபிரெயர் 9:15). புதிய உடன்படிக்கையைப் பெற்றுக்கொள்ளும் யூதர்களுக்கு இந்த வசனம் எழுதப்பட்டது. இரண்டு வேறுப்பட்டவர்களுக்கு இடையில் சமரசம் செய்வதற்கு ஒரு ஒப்பந்தம் அல்லது ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தும் நபர் - மத்தியஸ்தர். இஸ்ரயேலும், தேவனும் இந்த இரண்டு சாரார் ஆவர்.

இந்த மத்தியஸ்தராக மாறுவதற்கு இயேசு தன்னுடைய ஜீவனைக்கொடுக்க வேண்டியதாக இருந்தது. ஏனெனில், ஒரு பரிபூரண மனிதனின் பாவத்திற்காக (ஆதாம்) ஒரு பரிபூரண மனுஷனே ஜீவன் கொடுக்க வேண்டிதாக இருந்தது. முதல் உடன்படிக்கையாக இஸ்ரயேலருக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கொடுக்கப்பட்டது. அதை அவர்களால் கடைபிடிக்க முடியவில்லை. இனி வரக்கூடிய இராஜ்யத்தில் (ஆயிரவருட ஆட்சியில்) இந்த அழைப்பு இஸ்ரயேலர்களுக்கும், அதற்குப் பின் புது உடன்படிக்கையின் கீழ், தேவனுக்கேற்ற கீழ்ப்படிதலின் வழியாக இந்தப் பூமியின்மேல் நித்திய

ஜீவனைப் பெற விரும்பும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும்.

"எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது" (அப்போஸ்தலர் 15:16-17). இங்கு ஆமோஸ் 9:11-12-ஆம் வசனங்கள் மேற்கோள் காட்டப்படுகிறது. சபை தேர்வு செய்யப்பட்டு முழுமை பெற்றபின், புதிய உடன்படிக்கையின் கீழ் இஸ்ரயேல் மறுபடியும் கட்டப்படும். எருசலேம் உலகத்தின் தலைநகரமாகும். இதைத் தொடர்ந்து மிச்சமுள்ள மனுக்குலம் தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்தால் தேவனோடு ஒப்புரவாகுவதற்கு வாய்ப்புக்கொடுக்கப்படும்.


"புறஜாதியாருடைய நிறைவுஉண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார் என்றும்; நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை" (ரோமர் 11:25-27) என்று பவுல் எழுதுகிறார். இவைகள் அப்போஸ்தலர் 15:16-17-ஆம் வசனங்களுக்கு நிகராக உள்ளது. "எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன்." அல்லது சபை முடிவடைந்தப் பின், மாம்ச இஸ்ரயேலரோடு புது உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படும். இப்போது பெரும்பாலான இஸ்ரயேல் சமயசார்பற்று இருக்கிறார்கள். மேலும் அவர்களின் திரும்பக்கொடுத்தலில் தேவன் கிரியை செய்கிறாரா என்ற கேள்விகள் எழும்புகிறது. அர்மெகதோன் யுத்தத்தின் போது, அதில் மீந்திருக்கும் ஒரு பரிசுத்த வகுப்பார் அவரை ஏற்றுக்கொள்வார்கள் அதற்குப் பின் முழு தேசமும் அவரை ஏற்றுக்கொள்ளும்.

**முடிவுரை**

இஸ்ரயேல் படிப்படியாக சீர்பொருத்தப்படுவதும், தரிசு நிலம் திரும்ப விளைநிலமாகவும், 1878-ஆம் வருடத்திலிருந்து துவங்கி, இந்நாள் வரைக்கும் தொடர்கிறது. இஸ்ரயேலைச் சுற்றியிருக்கும் எதிராளிகள் முழுமையாக வீழ்த்தப்படும் வரையில், அவர்களுக்கு மேலும் சோதனைகள் தொடரும். மற்றொரு மாபெரும் அழிவான, கோகு மற்றும் மாகோகு படையெடுக்கும்போது, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அர்மெகதோனில் அழிக்கப்பட்ட எருசலேமும் மற்றும் ஆலயமும் மறுபடியும் கட்டப்படும். புதிய உலகத்தின் தலை நகரமாக எருசலேமையும், அவர்கள் தேவனுடைய இறுதியான அதிகாரம் பெற்றவர்களாகவும் அடையாளம் கண்டுகொள்பவர்களுக்கு, ஆசீர்வாதங்கள் செல்லும்.

அதற்குப் பின் நித்திய ஜீவனைப் பரிசாகப் பெறுவதற்கு மனுக்குலம் சோதிக்கப்படுவார்கள். மனந்திரும்பாத யாரானாலும் சரி, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

# ஜீவ தண்ணீரை இலவசமாகப் பெறக்கடவன்




Robert Davis

"சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வெளிப்படுத்தல் 21:5).

பெற்றோர் பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லக்கூடிய எதையும் சுதந்தரம் என்று பொருள் கூறலாம். தேவனே ஜீவனுக்கு ஊற்றாகவும், சகல சிருஷ்டிகளுக்கும் தலைமை சிருஷ்டிகராகவும் இருக்கிறார். அவருடைய உரிமையின் கீழ் சகலமும் துவங்கப்பட்டது என்று நாம் அறிந்திருக்கிறோம். மனுஷனுக்கு ஜீவன் கொடுக்கப்பட்டது, ஒரு குறுகிய காலத்திற்கான ஆசீர்வாதமாக இருந்தாலும், நித்திய ஜீவனுக்காகத் தேவைப்படும் சகல ஏற்பாடுகளும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. மற்ற மிருகங்களைப் போலிராமல், மனுஷன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டார். தேவனுடைய வழிகளைப் புரிந்துகொள்வதற்கான முன்னேற்றமான அறிவையும், தேவனுடைய குணங்களை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு அவரை அன்பு, ஞானம், நீதி மற்றும் வல்லமையினால் நிரப்பினார். தேவனுடைய சிருஷ்டிப்புகளில் நாம் மகிழ்ந்திருப்பதற்கு மனுஷன் சிருஷ்டிகருடைய கூர்மதியையும் சுதந்தரித்தார். நம்முடைய இருதயங்களில் பதியப்பட்டிருக்கும் உணர்வுகளை, நம்முடைய ஆண்டவர் பெற்றிருக்கும் உணர்வுகளை அறிந்துகொள்வதற்கு உதவி செய்கிறது.

### மனுக்குலம் விரும்பிய சுதந்தரம்

முதல் மனுஷனையும், மனுஷியையும், தேவன் அவர் தாமே நாட்டின தோட்டத்தில் வைத்தார். அதுவே அவர்களுக்கு ஒரு நிறைவான குடியிருப்பாக பயனளித்திருக்க வேண்டும். நித்திய ஜீவனுக்குத் தேவையான சகலமும் அதில் வளர்ந்தது. மேலும் இயற்கையில் காணத்தக்க ஒரு காட்சி அவருடைய ஆத்துமாவுக்கு மகிழ்ச்சி அளித்தது. சகல மிருக ஜீவன்கள்மேலும் பூமியின்மேலும் அவருக்கு ஆளுகை கொடுக்கப்பட்டது (ஆதியாகமம் 1:28; 2:5).

மனுஷன் மற்றும் மனுஷி, ஒருவருக்காக மற்றொருவர் கொடுக்கப்பட்டார்கள். ஒவ்வொருவரும் தனிப்பட்ட தனித்துவமான திறமைகள் கொண்டிருப்பதினால், தனியாக இருப்பதைக் காட்டிலும் இவர்களின் கூடுகை மிக வலிமையுள்ளதாக இருந்தது. கூடுதலாக தேவன் ஆதாமோடு நடந்தார், அதாவது சிருஷ்டிகர் தம்முடைய சிருஷ்டியோடு நேரடியான தொடர்பு கொண்டிருந்தார் (ஆதியாகமம் 3:8).

### கிருபையிலிருந்து விழுதல்

ஒரு சிறிய கீழ்ப்படியாமையின் செயலினால், இந்த அற்புதமான சுதந்தரம் தொலைந்துபோனது. ஒரு கனியின் ஒரு பகுதியைப் புசிப்பது, சிறிதான தவறுபோல தோன்றலாம். சாத்தானுடைய ஆலோசனைகளைத் தவிர்த்து அன்பானவரும், தாராள குணமுடைய தங்களுடைய பிதாவுக்கு விசுவாசமுள்ளவர்களாகத் தங்களைக் காத்துக்கொள்வதற்கு ஆதாம் மற்றும் ஏவாள் பரிபூரணமான தகுதயைப் பெற்றிருந்தார்கள். தேவனுடைய சித்தத்தை விட்டு சுதந்தரமாகச் செயல்பட்ட மனுஷன் சுகமாக இருப்பதற்குப் பதிலாக சீரழிந்துப்போனான். வருங்கால அனுபவங்களுக்காக ஒரு பாடம் வடிவமைக்கப்பட்டது. ("நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனி, புசிக்கும்போது, அவர்கள் முதல் முறையாக அந்த அறிவைப் பெற்றிருப்பார்கள். உண்மையில், பரலோகத்தின் தூதர்கள் முன்னதாகவே அறிந்திருந்த உள்ளான பார்வையை அவர்களும் பெற்றிருப்பார்கள் - ஆதியாகமம் 3:1-6). அருமையான, நித்திய ஜீவன் எளிமையாகத் தொலைந்தது. மனுஷன் பாடுபடுவதற்கும், ஸ்திரீகள் வேதனையோடு பிள்ளைப் பெற்று, தங்களுடைய கணவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பதைத் தண்டனையாகப் பெற்றார்கள். அதற்கு மேலாக, இருவருமே தேவனுடைய நெருக்கமான ஐக்கியத்தைத் தொலைத்தார்கள்.

ஆயினும், ஆபிரகாம் மற்றும் அவருடைய சந்ததியாரோடு ஒரு விசேஷித்த ஐக்கியத்தை ஏற்படுத்த தேவன் விரும்பினார் (ஆமோஸ் 3:2). மீண்டுமாக, மனுக்குலத்தின் சிலரோடு தேவன்

நெருங்கினார். ஆனால் இந்த முறை சில மத்தியஸ்தர்களாகிய முற்பிதாக்கள், பிரதான ஆசாரியர்கள் தீர்க்கதரிசிகளின் மூலமாக, அவருடைய பிரசன்னத்தை, அற்புதங்களின் வழியாகத் தொடர்புகொண்டார்.

தேவனுக்கும் இஸ்ரயேலுக்கும் இடையில், நியாயப்பிரமாணம் என்ற ஒரு விசேஷித்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் குடியிருப்பதற்கு ஒரு தேசத்தைக்கொடுத்தார். மேலும் தேவனால் எழுதப்பட்ட வார்த்தைகள் இஸ்ரயேலர்களிடம் நம்பிகொடுக்கப்பட்டது. இதினிமித்தம் பகைமையான உலகத்திலும் நீதி எப்போதும் வாசமாயிருந்தது. ஆகவே தேவைப்படும் போது, தேவன் இஸ்ரயேலருக்கு, சாத்தானின் தீவிரமான தாக்குதலிலிருந்து பாதுகாப்பளித்தார். கூடுதலாக அவர்கள் செல்வ செழிப்பினாலும் சுயாதீனத்தினாலும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

முதலாவது - அந்தத் தேதி மட்டும் - இஸ்ரயேல்மேல் தேவன் நடத்தின ஆட்சி, தனிப்பட்ட சுதந்தரத்தை அதிகமாக அனுமதித்தது (நியாயாதிபதிகள் 21:25). வேறுபாடுகளை நீக்குவதற்கு நியாயாதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். இந்த நியாயாதிபதிகளோ, ஆசாரியர்களோ தனிப்பட்டவர்கள்மேல் எந்தவிதமான ஆதிக்கத்தையும் செலுத்தவில்லை. தங்களைப் பெரிய இராஜா ஆட்சி செய்ய வேண்டும் என்று இரயேலர்களே விரும்பினார்கள். ஜனங்களுக்கும் இன்னும் அதிகமாக நன்மை செய்யக்கூடிய வேறொரு உறுதியான அரசாங்கத்தை இவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆயினும், எப்போதும் நடப்பது போல, தேவனுடைய தலைமையின் கீழ் இருந்ததைக் காட்டிலும் அநீதியான ஜனங்களின் கீழ் வேதனைகளை அனுபவித்தார்கள் (1சாமுயேல் 8:18).

இஸ்ரயேலர்களின் இருதயம் பெருமைகொண்டு, கடினப்பட்டதினால், இஸ்ரயேலர்கள் தங்களுடைய சுதந்தரத்தைத் தொலைத்துவிட்டனர். - தேசம், ஆலயம், பாதுகாப்பு, தேவனோடு அவர்கள் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பு. ஆகவே அவர்கள் தேசம் அந்நியர்களால் கைப்பற்றப்பட்டு, அந்நிய தேசத்தில் பயத்தோடு ஜீவிப்பதற்குக் கட்டாயப்படுத்தப்பட்ட போது, இவர்கள் தங்களுடைய சுதந்தரத்தைத் தங்களுடைய எதிராளிகளிடம் தொலைத்தார்கள்.

ஆனால் இந்த இரண்டாவது வீழ்ச்சியின் போது கிறிஸ்தவம் எழும்பியது. அதற்குள்ளாகவே மூன்றாவது வீழ்ச்சி உருவானது 2 தெசலோனிக்கேயர் 2:3. (வெளிப்படுத்தல் 12-ஆம் அதிகாரத்தில் ஸ்திரீயினிடத்தல் உருவான அந்த ஆண் பிள்ளை போப்பமைப்பாகப் பிறந்தது. மேலும் இது மூன்றாவது வீழ்ச்சியையும், தேவனுடைய கிருபை பெற்ற வகுப்பார், கொடிய பாவச்செயலினால் பின்மாற்றம் அடைந்தார்கள்.) அந்திகிறிஸ்து எதிர்த்து ஒரு சிறு மந்தையான தனி நபர்கள் இறுதியில் நீதியான ஒரு பரிபூரண சரீரமாக உருவானார்கள். இவர்கள் இயேசுவோடு ஒன்றாகி ஒரு கணவனுக்கேற்ற மனைவியைப் போலானார்கள். இப்படியாக, தேவனுடைய குடும்பத்தில் திருமணம் செய்து கொண்டார்கள். தேவன் அவர்களுக்காக நியமித்த வேலைகளைச் செய்வார்கள். அதாவது இவர்கள் தூதர்களையும், மனுஷரையும் நியாயம் விசாரிப்பார்கள் (மத்தேயு 19:28; 1கொரிந்தியர் 6:3; வெளிப்படுத்தல் 20:4). ஆதாம் ஆதியில் பெற்றிருந்த நித்திய ஜீவனைப் பெறுவதற்கான நீதியுள்ள விதிமுறைகளுக்கு, அவர்களை மறுபடியும் திரும்பிக்கொண்டு வருவதற்கு உதவி செய்வார்கள்.

**இஸ்ரயேலின் வருங்கால சுதந்தரம்**

"முந்தினவர்கள் பிந்தனவர்களாகவும், பிந்தினவர்கள் முந்தினவர்களாகும்படிக்கு" என்ற இயேசுவின் கோட்பாடுகளைப் பொறுத்தவரையில், உயிர்த்தெழுதலின் ஒழுங்கிற்குப் பொதுவாக பொருந்தக்கூடியதாக இருக்கிறது. ஒருவேளை, பரிசுத்தவான்கள் முதலில் உயிர்த்தெழுந்தப் பின் இஸ்ரயேல் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். இறுதியாக ஆதாமின் பிள்ளைகள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அப்போது இஸ்ரயேலரோடும் இஸ்ரயேலில் புதிதாக உயிர்த்தெழுந்தவர்கள் மத்தியிலுள்ள புதிய இருதயங்களோடு இணைந்து "புதிய உடன்படிக்கை" என்று எரேமியா அழைக்கப்படும் ஒரு ஒப்பந்தம் அவர்களோடு ஏற்படுத்தப்படும் (எரேமியா 31:31; எசேக்கியேல் 16:61-62). மனுக்குலத்தின் மத்தியில் இந்த உடன்படிக்கை தனித்துவமாக இருக்கும். மேலும் இந்த உடன்படிக்கை, இஸ்ரயேலை தாவீது இராஜாவின் (எசேக்கியேல் 34:23-24; 37:25; எரேமியா 30:8-9; லூக்கா 1:32). தலைமையின் கீழும், மற்ற இஸ்ரயேலின் முற்பிதாக்களை, தேவனுடைய

பிரமாணங்களுக்கும், தெய்வீக தொடர்புகளுக்கும், நிர்வாகிகளாக நியமிக்கும். இந்த நோக்கத்திற்காக மீண்டும் ஒரு ஆலயம் கட்டப்படும் (ஆமோஸ் 9:11). இவர்கள் தங்களுடைய தந்தையாகிய ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தை நித்தியமாகச் சுதந்தரிப்பார்கள். இஸ்ரயேல் தேசம் மீண்டும் உருவானது முதல், உலகளாவிய எதிர்ப்புகளை சுதந்தரித்தப்போதிலும், இந்நாள் வரைக்கம் அந்த தேசம் செழிப்பாக முன்னேறி வருவதே இக்காரியங்கள் துவங்கி விட்டது என்பதற்கான சாட்சியாகும்.

430 வருடங்களுக்குப் பின் எகிப்திலிருந்து (யாத்திராகமம் 12:40) வந்த எபிரெயர்கள், தங்களுடைய தந்தையாகிய ஆபிரகாமின் சுதந்தரத்தைக் கண்டுபிடித்து கைப்பற்றுவதற்கு அங்குக் குடியிருந்த அரபியர்களோடு யுத்தம் நடத்திக்கொண்டே இருந்தார்கள் (பெலிஸ்தியர்கள் காமின் சந்ததி என்று ஆதியாகமம் 10:14-ஆம் வசனம் கூறுகிறது). தேவனுடைய இராஜ்யம் பகிரங்கமாக நடைபெறுகையில் சேம் வம்சத்தின் வழியாக யூதர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடியவர்கள் விரும்பினால், அதில் யூதர்களோடு குடியருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். தேவனுடைய பிரமாணங்களைக் கீழ்ப்படியாமற்போனால் வெளியேற்றப்படுவார்கள் (எரேமியா 12:14-17; எசேக்கியேல் 47:22-23). முழு மனுக்குலமும் இஸ்ரயேலின் அதிகாரமாகிய, ஆவிக்குரிய நிலையிலும், ஆட்சிக்குரிய நிலையையும், அறிந்திருக்க வேண்டும். மனுக்குலத்தின் முரண்பட்ட சமுதாயத்திற்கு இஸ்ரயேல் தலை நகரமாக விளங்கும் (சகரியா 8:23).

**உயிர்த்தெழுதல்**

அனைவரும் மனுஷ குமாரனுடைய சத்தத்தைக் கேட்டு வெளியே வருவார்கள் (யோவான் 5:28-29-ஆம் வசனங்களில் குறிப்பிடப்படுவார்கள். வெளிப்படுத்தல் 20-ஆம் அதிகாரத்தின் 1000 வருஷம் நியாயத்தீர்ப்பின் நாளில் உயிர்த்தெழுப்பப்படுவார்கள்). இந்த உயிர்த்தெழுதல், கிறிஸ்துவின் இரத்தம் சிலுவையிலிருந்து பூமயின்மேல் விழுந்தது என்ற மனுக்குலத்திற்கான ஈடுபலி செயல்பட துவங்கும். நேசிக்கப்பட்ட ஒவ்வொருவரும் உயிரோடிருப்பதை உணரும் போது, எவ்வளவு அற்புதமான நேரமாக இருக்கும். சாத்தானின் செயல்பாடுகள் நீக்கப்பட்டிருந்தாலும், மனுக்குலம் கிறிஸ்துவின் இருப்புக்கோல் ஆட்சியின் கீழ் இருப்பதினால் சில இரகசியமான இருதயங்களுக்குள் போராட்டங்கள் நடந்து கொண்டிருப்பதினால் அது ஒரு எளிதான காலமாக இராது. தங்களைக்குறித்து சாதகமாக எண்ணியிருந்தவர்கள் அழுது, தங்களுடைய பற்களைக் கடிப்பார்கள். (தங்களையே நல்லவர்கள் என்று எண்ணினவர்கள் உயிர்த்தெழுதலில் புறக்கணிக்கப்படும் போது தங்களுடைய மிகப் பெரிய ஏமாற்றங்களை விவரிப்பதற்கு, "அழுதலும், பற்களைக் கடிப்பதும்" என்ற சொற்கள் உவமைகளில் பயன்படுத்தப்படுகிறது). சிலருடைய ஏமாற்றங்கள் வேதனையைக் கொடுக்கும். சிலர் அந்த ஏமாற்றத்தினால் கோபங்கொள்வார்கள். இப்படியாக, நன்மை மற்றும் தீமையின் அனுபவங்களைப் பெற்று உயிர்த்தெழுந்த மனுக்குலம் தங்களுடைய இருதயங்களை நியாந்தீர்ப்பார்கள். இந்த ஆயிர வருட காலம், நியாத்தீர்ப்பின் நாள், பயங்கரமான நாள் அல்ல மாறாக, ஜீவனைப் பெறுவதற்கான வாய்ப்பாகும்.

தங்களுடைய இருதயங்களில் போராடிக்கொண்டிருக்கும் மீதியுள்ள மனிதர்கள், சாத்தான் காவலிலிருந்து விடுதலைப் பெற்றவுடன் கடைசி பரீட்சையின் போது வெளியேற்றப்படுவார்கள். இவர்களுக்கு ஆளுகை செய்யும் அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை. எனெனில் கிறிஸ்து, வேறெந்த அதிகாரத்தையும் பொறுத்துக் கொள்வதில்லை. (வெளிப்படுத்தல் 19:15 கிறிஸ்துவின் ஆயிரம் வருட ஆட்சி இருப்புக்கோல் ஆட்சியாக இருக்கும்). ஆயினும் அவர் தம்முடைய வல்லமையைப் பயன்படுத்தி, மீதியிருக்கும் துன்மார்க்கமான சிந்தைகளையும் வெளியேற்றுவார். போராட்டங்கள் அனைத்தும் பரத்திலிருந்து அழிக்கப்படும் (வெளிப்படுத்தல் 20:9). இதன் வழியாக தேவனுடைய வல்லமையையும் பிரசன்னமும் மனுக்குலத்தின் மத்தியில் தெளிவாகச் செயலாற்றப்படும்.

**மனுக்குலத்தின் வருங்கால சுதந்தரம்**

முடிவில் மனுக்குலத்திற்கு என்ன ஆதாயம் கிடைக்கும்? அடிப்படையில், நித்திய ஜீவனைப் பெறுவார்கள். ஆயினும் தொடர்ந்து நீதியில் நிலைத்திருப்பதன் அடிப்படையில் இந்த ஜீவன்

கொடுக்கப்படும். இப்போது கடைபிடிப்பதற்கு மிகக் கடினமான காரியங்கள், அப்போது மனுக்குலத்திற்கு மிக எளிமையாகவும், உறுதியோடும் நிறைவேற்றுவார்கள். ஏனெனில், ஆதாம் மற்றும் ஏவாளிடம் பெற்றிராத அந்த அறிவை, இவர்கள் அனுபவத்தின் மூலமாகப் பெற்றிருப்பார்கள். தேவனுடைய சித்தம் செய்யாமல் தங்களுடைய சொந்த சித்தத்தைச் செய்ததனால் வந்த பலன்களை அவர்கள் புரிந்துகொண்டவர்களாக, இவைகள் நடந்து முடிந்தப் பின் அதைப் பற்றி நன்கு புரிந்துகொண்டவர்களாக இருப்பார்கள். இவர்கள் நன்மை தீமையின் அறிவான முழு கல்வியையும் பெற்றிருப்பார்கள். அதாவது, தேவனுடைய சித்தத்தைச் செய்வதினால் வரும் நன்மையான பலன்களும், அவருடைய சித்தத்திற்கு விரோதமாகச் செய்யும் போது வரும் கடினமான அனுபவங்களையும் பெற்றிருப்பார்கள். இக்காரியம் அவர்களின் இருதயங்களில் பதிந்து, தேவனுடைய சித்தத்தைச் செய்யக்கூடிய விருப்பத்தை மட்டும் அல்ல மாறாக அதைத் தாகத்தோடு தேடுபவர்களாக இருப்பார்கள்.

இந்தப் பூமி ஏதேன் தோட்டமாக மாறிவிடும். துருவங்கள் தேவையான அளவிற்கு மிதமான சூடாகி, மத்திய பகுதிகள் கதகதப்பான சீதோஷண நிலைக்கு மாறலாம். (பனிக்கட்டி உருகுவது, புவி வெப்பத்தின் பாதிப்பினால் அல்ல, மாறாக, கரியமல வாயுவின் வெளியேற்றுதல் குறைவாக இருந்தபோதே, அவைகள் உருக துவங்கியது என்று சகோதரர் ரசல் தன்னுடைய மறுபதிப்புகளில் எழுதியுள்ளார். 5159:11 ) பருவ காலங்களை வேறுபடுத்துமளவுக்கு சீதோஷணங்களில் தேவையான மாற்றங்கள் ஏற்படும். ( ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த சீதோஷண நிலைக்கு மாறும் ஆதியாகமம் 8:22). மிகுதியான சீதோஷணங்கள் மிதமாக இருக்கும். ஒருமுறை வட அமெரிக்காவை மூடியிருந்த பனிப் படலம் இறுதியாக குடியிருப்பு பகுதியாக மாறினபோது, இப்படிப்பட்ட ஒரு செயல்முறை நடந்ததை நாம் காணலாம். பூமியின் சூடாகும் துருவங்கள்மேலுள்ள ஆகாய மண்டலத்தில், காற்றை விட இலேசான நீராவியாகச் சென்று விடுகிறது. கரியமல வாயுவினால் அல்ல, தண்ணீர் மற்றும் நீர் ஆவி மட்டுமே இந்தப் பூமியின்மேல் சீதோஷண நிலைகளை நிர்ணயிக்கிறது. (பூமியைச் சுற்றியுள்ள இந்தத் தண்ணீர் படலம் அதில் குடியிருப்பதற்குப் பூமியைத் தகுதிபடுத்தியது - ஆதியாகமம் 1:7, வளர்ச்சியடைந்துக்கொண்டிருக்கும் இந்தப் பூமியைச் சுற்றி, அடர்த்தியான தண்ணீர் படலம் மூடுவதைப் போல என்று, யோபு 38:9-இல் ஆலோசனைக் கூறுகிறார்.)மனுஷன் எரிக்கக்கூடிய புதைப்படிவம் காற்றை விட கனமானதாக மாறி, கரியமல வாயுவைப் பூமியின்மேல் பரப்பில், படியச் செய்து, செடிகொடிகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது. கனடா, கிரீன்லாண்டு மற்றும் டுன்டிரா பகுதிகளிலுள்ள வீணாகக் கிடக்கும் பனி உரைந்த நிலங்கள் மனித குடியிருப்பாகவும், இயற்கை வளத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அங்குள்ள நிலங்கள் விளைநிலங்களாக மாறும். வடதுருவங்களில் நீண்ட கால சூரிய ஒளி பூமியிலுள்ள பில்லியன் கணக்கான ஜனத்திற்கு அபிரிவிதமான விளைச்சலைக் கொடுக்கும். காய்ந்திருக்கும் தரிசு நிலங்கள் குழாய்களின் வழியாகத் தண்ணீரைப் பெறும். பூமியின்மேல் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர் அங்குப் பாய்ச்சப்படலாம் (ஏசாயா 35:6). பூமியின் அண்டைவெளி திரும்ப, ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்தப் படலமாக மாறினால், அண்டைவெளி அழுத்தம், அந்தப் படலத்தின் இடையைக் கூட்டிவிடும். அதிகரிக்கப்பட்ட அண்டைவெளியின் அழுத்தமும், கரியமல வாயும் அதிகரிக்கும்போது, செடி கொடிகளின் வளர்ச்சி கற்பனைக்கு எட்டாத அளவிற்கு அதிகரிக்கும். அதோடு பிராணவாயு இணையும்போது மனுஷ சரீரம் மிக ஆரோக்கியமாகவும் உடல் வளமாகவும் இருக்கும். பூமியின்மேலுள்ள சாபம் நீக்கப்பட்டு அழகான, கனிதரும் செடிகள் இந்தப் பூமியை மூடும். இயற்கை பூமியில் வசிப்பவர்களுக்கு எதிராகச் செயல்படுவதைக் காட்டிலும் அவர்களோடு இசைவாகச் செயல்படும்.

மனுக்குலம் மற்றும் மிருகங்கள், மாம்சம் புசிக்கும் அவசியத்தை விட்டு விட்டு, சைவ உணவை விரும்பிப் புசிப்பார்கள் (ஏசாயா 11:6-9). கிடைக்கக்கூடிய தாவரங்கள் தேவையான சத்துள்ள உணவுகளை, சிறந்த நறுமணத்தோடு கொடுக்கும். தானியங்கள், காய்கறிகள் மற்றும் கனிகள், மாம்ச உணவைக் காட்டிலும் அதிகமான விளைச்சலைக் கொடுக்கும். இப்படியாக, அதில் உணவு தானியங்களையும், காடுகளையும், பொழுது

போக்கிடங்களையும், குடியிருப்புக்கான இடங்கள் அதிகமாக நிலங்கள் இருக்கும். இனப்பெருக்குதல் நிறுத்தப்படுவதினால், திருமண பந்தங்கள் புதிதாக ஏற்படுத்தப்படுவதில்லை (மத்தேயு 22:30).


விசேஷித்த தேசமாகிய இஸ்ரயேலின் வழியாக கிறிஸ்து மற்றும் சபையின் ஆட்சி அனைவருக்கும் விடுதலையையும் நன்மைகளையும் அதகரிக்கும். தனிப்பட்ட நபர்கள், சர்வாதிகாரத்தினாலும் சமுதாய ஒழுங்குகளினாலும், கட்டுப்படுத்தப்பட மாட்டார்கள். உழைப்பாளிகளும் விருப்பமுள்ள தனி நபர்களும் தங்களுடைய உழைப்பின் பலன்களை விரிவாக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். தங்களுடைய தாலந்துகள் மற்றும் விருப்பங்களை அவர்கள் கண்டறிந்து, தங்களுக்கும் சமுதாயத்திற்கும் பலனுள்ளவர்களாக இருப்பார்கள் (மீகா 4:4).

அதிகமாக உழைக்காமல் ஆர்வம் குறைவாக உள்ளவர்கள், பொறுப்புள்ளவர்களாக, தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்வர். ஏனெனில், அவர்களின் வாழ்க்கை எளிதாக இருக்கும். அவர்களுடைய முயற்சி தோல்வி அடைந்தாலும், எங்கும் நிறைந்திருக்கும் அந்தத் தாராள குணமான இயல்புகள், அவர்கள் பலன் அடைவார்கள். கூடுமானால், யூபிலியின் கோட்பாடு கள் பின்பற்றப்படும். மேலும் இப்போது இருப்பது போல ஜனங்கள் தனிப்பட்ட சொத்தை எடுத்துக் கொள்வதற்கு எப்போதும் அனுமதிக்க மாட்டார்கள். இப்போது நம்முடைய உடல் சுகம் இருக்கும் வரையில் தான், நம்முடைய தாலந்துகளையும், திறமைகளையும் பயன்படுத்த முடியும் ஆனால், அப்பொழுது மனுக்குலம், காலவரம்பின்றி தாலந்துகளையும், திறமைகளையும் பயன்படுத்துவார்கள். இப்படியாக மனுக்குலம் வல்லமையுள்ள சரீரங்களில் செயல்படுவார்கள். விஞ்ஞானம், கல்வி, கண்டுபிடிப்புகள் போன்றவை களை எந்தளவுக்கு சாதிப்பார்கள் என்று சற்று கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? பாதுகாப்பான அமைப்புகளாகிய காவல் துறை, இராணுவங்கள் அனைத்தும் வளர்ச்சிக்குரிய செயல்களை நோக்கி தங்களுடைய திறமைகளைப் பயன்படுத்தும் போது, இந்தச் சமுதாயம் எவ்வளவு திறமையாகவும் வளமாகவும் இருக்கும்? (மீகா 4:3).

"மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளிப்படுத்தல் 21:3-4).

"அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்" (வெளிப்படுத்தல் 21:6) என்று தேவன் இந்த முறை கூறுவார். மிகப் பெரிய இரட்சிப்பின் வேலைகள் நிறைவடையும் போது, சகல அறிவுள்ள சிருஷ்டிகள் அனைத்தும், தங்களுடைய சிருஷ்டிகரோடும், ஒவ்வொருவரோடும், தங்களோடும் சமாதானமாகவும், இசைந்தும் நித்தியமாக ஜீவிப்பார்கள்.

# தேவனுடைய சுதந்தரம்




"எகிப்தியராகிய என் ஜனமும், அசீரியராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரவேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டது" (ஏசாயா 19:25).

Russell Marten

தேவனுடைய சுதந்தரம், யாரிடத்தில் தேவன் எதைப் பெறமுடியும்? பெரும்பாலும் நமக்கு முன் சென்றவர்களிடமிருந்து சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதை சுதந்தரம் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் தேவன் யாரிடமிருந்து சுதந்தரத்தைப் பெறுவார்?

பழைய ஏற்பாட்டில், சுதந்தரத்திற்குச் "சொத்து," "பங்கு" என்ற வார்த்தைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பெரியவர்கள் அல்லது சொத்து உரிமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஏதோ ஒரு காரியத்தை இது பொருள்படுத்தும். ஆனால் இதைத் தேவனுக்குப் பொருத்திப்பார்க்கும் போது, "பங்கு" அல்லது பகுதி என்பதற்கு தேவனுடைய சொத்து - தேவனுக்குச் சொந்தமானதும், சிருஷ்டிப்பு, இரட்சிப்பு மற்றும் மீட்பின் செயல் முறைகளில் நிறைவேறுகிறது. இறுதியாக, தேவன் பெற்றுக்கொள்ளும் அவருடைய சுதந்தரம் அற்புதமானதும் மேன்மையான சம்பவமாகும் - யுகங்கள் முழுவதும் அவருடைய எல்லா சிருஷ்டிப்புகளுக்கு அவருடைய திட்டத்தின் உச்சநிலையாகும்.

**சிருஷ்டிப்பு**

ஆதியில், தேவன் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தார். தேவன் சிருஷ்டித்ததைப் பார்க்கும்போது, அனைத்தும் நன்றாக இருந்தது (ஆதியாகமம் 1: 1, 31). இந்த நேர்த்தியான, எளிமையுள்ள மொழி ஒரு திகைப்பூட்டும் சம்பவத்தை விவரிக்கிறது. ஒரு பரிபூரண சிருஷ்டிப்பு. எண்ணிக்கைக்கு அடங்காத நட்சத்திரங்கள், வானிலுள்ள நட்சத்திரக் கூட்டங்கள் மற்றும் பரலோக அற்புதங்கள் அனைத்தும் ஒரே நேரத்தில், தங்களுடைய சரியான வழிகளில் ஒருமித்துப் பயணிக்கிறது.

பூமியின்மேல் ஜீவன் பரிபூரணமாக இணைந்துள்ள சூரிய ஒளி, ஊட்டச்சத்துக்கள் மற்றும் அண்டைவெளி அதிகபட்சமான செடிகொடிகளுக்கும், மிருகங்களுக்கும் வாழ்வளிக்கிறது. இக்காரியம் ஒன்றோடொன்று இசைந்துள்ளதாகவும், அற்புதமாகவும் இருப்பதினால், அதனுடைய அமைதியான அழகையும், நேர்த்தியையும் கண்டு மனிதன் வியந்துகொண்டிருக்கிறான்.

புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட பரலோகங்கள் மற்றும் பூமி மிக அற்புதமாக இருந்ததினால் விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடினார்கள். அனைத்து தேவபுத்திரரும் மகிழ்ச்சியோடு ஆர்ப்பரித்தார்கள் (யோபு 38:7). லோகாஸ் மற்றும் மீதியுள்ள தேவனுடைய பரலோக குடும்பம் தொடர்ச்சியாக, அவர்களின் அன்பான தந்தையைப் பாடி புகழக்கூடிய அழகை சற்று கற்பனை செய்து பார்க்கலாம். தேவனுடைய படைப்பில் பரலோகங்களும், பூமியும் சிறந்த சிருஷ்டிப்பாகும். மற்றும் இவைகள் தேவனுடைய மதிப்புள்ள ஒரு சொத்தாகும். நித்திய நித்தியமாக அவர் மகிழக்கூடிய சுதந்தரமாகும்.

**மனுக்குலம்**

தேவனுடைய பூமிக்குரிய சிருஷ்டிப்பில், சிறந்த பொக்கிஷம் - மனுக்குலம். உயிருள்ள ஜீவியாக மட்டுமல்ல அதற்கும் மேலாக ஒரு கலையுணர்வோடு சிருஷ்டித்தார். உணர்வோடும், ஆவியோடும், குடும்ப பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய ஒரு பூமிக்குரிய ஜீவியை தேவன் சிருஷ்டித்தார். மனுஷனுக்குள் தேவன் அன்பின் உள்ளார்ந்த ஆற்றலை வைத்தார். தாம் நேசிக்கக் கூடிய ஜீவிகளையும் அவரை நேசிக்கக்கூடிய ஜீவிகளையும் ஒருவர் மற்றொருவரை நேசிக்கக் கூடிய ஜீவிகளாகவும் சிருஷ்டித்தார்.

தேவன் பூமியைச் சிருஷ்டித்தபோது, அது இன்னும் முடிவு பெறாமல் இருந்தது. மனுகுலத்தை ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு நபரின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு ஏதேன் தோட்டம் ஆயத்தமாக இருந்தது. ஆனால் மீதியுள்ள பூமி முழுமைப் பெறாமல் மனிதனை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமையில் இல்லாதிருந்தது. அதுபோல மனுக்குலம் பூரணமாக சிருஷ்டிக்கப்பட்டாலும் முழுமைப் பெறவில்லை. அவர் பரிபூரணமாக இருந்தார் என்பதற்கு - அவர் பாவமில்லாமல் இருந்தார் என்பதே பொருளாகும். மேலும் விசுவாசம், அன்பு, ஞானம் போல குணலட்சணங்களைத் தங்களுக்குள் முழுமையாக வளர்த்துக்கொள்ளக் கூடிய பூரணமான இயல்பைப் பெற்றிருந்தார். ஆயினும் மனுஷ வாழ்க்கைக்கான அந்த மதிப்புள்ள அந்தக் குணங்கள் முழுமையாகக் கற்றுக்கொள்ளவில்லை. மனுக்குலம் முழுமையான ஆற்றலைப் பெற்றருந்தார். ஆனால் அனுபவங்களிலும், அறிவிலும் நிறைவு பெறவில்லை.

தேவன், ஆதாம் மற்றும் ஏவாளோடு கொண்டிருந்த ஐக்கியம் அருமையானதும், நிறைவானதுமாக இருந்தது - மிருதுவும், கதகதப்பும், மென்மையானதுமாக இருந்தது. இப்பொழுது தேவன் அழகான மனித குமாரனுக்கும், குமாரத்திக்கும் தந்தையானார். மனுக்குலத்தின் வாழ்க்கையில் சம்பவிக்கப் போகும் பாவம் மற்றும் அதன் விளைவாக வரும் வீழ்ச்சியை அவர் முன்னறிந்தும் "நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன்" (ஆதியாகமம் 3:10) என்று அவருடைய குமாரன் சொன்னபோது அவருடைய இருதயம் வேதனைப்பட்டிருக்கும்.

நன்மை, தீமையை அறியத்தக்க விருட்சத்தின் கீழிருந்து, மனுக்குலம் பாவத்திற்குள் தங்களுடைய பயணத்தைத் துவங்கியது. இந்த நீண்ட கால பயணத்தைச் சரி செய்வதற்கு ஆயிரம் வருஷங்கள் கொண்ட இரட்சிப்பின் திட்டம் தேவைப்பட்டது. ஆனால் இறுதியில், இரட்சிக்கப்பட்டு, சீர்பொருந்தப்பட்டு கல்வி கற்று முடித்த மனுஷ குமாரர்களும் மனுஷ குமாரத்திகளும் முழுமையடைந்த பூமியில், பரிபூரணமாக ஜீவிப்பதே தேவனுடைய சுதந்தரத்தின் மற்றொரு பகுதியாக இருக்கிறது. அதை அவர் நேசித்து, அதில் அவர் என்றென்றும் மகிழ்ந்து களிகூருவார்.

இதுவே, "நீதிவாசம் செய்யும் புதிய பூமி" அதில் மனுக்குலம், "அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" (2 பேதுரு 3:13; வெளிப்படுத்தல் 21:3). "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளிப்படுத்தல் 21:4).

**இஸ்ரயேல்**

கூடுதலாக, விசேஷித்த ஆசிர்வாதங்களைக் கொடுப்பதற்கு சிலாக்கியம் பெற்ற ஒரு சிலரை தேவன் தேர்வு செய்திருக்கிறார் - இஸ்ரயேல் - தேவன் இஸ்ரயேலரை, தம்முடைய விசேஷித்த சுதந்தரவாளியாக எடுத்துக்கொண்டார் என்று எபிரெயர்களுக்கு எழுதப்பட்ட நிருபம் குறிப்பிடுகிறது.

"இந்நாளில் நீங்கள் இருக்கிறதுபோல, தமக்குச் சுதந்தரமான ஜனமாயிருக்கும்படி, கர்த்தர் உங்களைச் சேர்த்துக்கொண்டு, உங்களை எகிப்து என்னும் இருப்புக்காளவாயிலிருந்து புறப்படப்பண்ணினார்" உபாகமம் 4:20).

**"-------------" (உபாகமம் 8:32).** இஸ்ரயேல் தேவனுடைய சொந்தமான சுதந்தரமாக இருந்ததினால் அவர் இஸ்ரயேலர்களை மனதில் கொண்டவராக இந்த உலகத்தை ஏற்பாடு செய்தார்.

தேவனுடைய விசேஷித்த சுதந்தரமாக, இஸ்ரயேலை அவர் தேர்வு செய்ததினிமித்தம் அது எவ்வளவாய் பாக்கியம் பெற்றது என்று சங்கீதம் 33:12-22 வசனங்கள் கூறுகிறது. மனுஷ இருதயம் எவ்வாறு சிந்திக்கும் என்று தேவன் அறிந்திருக்கிறார். மனித பலத்தை நம்புவது மனுக்குலத்திற்கு இயல்பான காரியம். ஆனாலும் அவைகள் அவர்களை இரட்சிக்காது. தேவனுடைய பாதுகாப்பே அவருடைய பிள்ளைகளை மீட்கும். தேவன் தம்முடைய சுதந்தரமாக தேர்ந்துகொண்ட தேசம் ஆசீர்வதிக்கப்பட்டது. - பாதுகாத்து வளம்பெறுவதற்காக. அதுபோல நாங்களும் உம்மேல் விசுவாசம் கொண்டிருப்பதினால் எங்களையும் ஆசிர்வதித்தருளும் என்று தாவீது தன்னுடைய சங்கீதத்தை நிறைவு செய்கிறார்.

தாவீது தன்னுடைய இளம்பிராயத்தில் ஆடுகளை மேய்த்துக்கொண்டு, அவைகளின் தேவைகளைப்பூர்த்திசெய்து பாதுகாத்து பராமரித்து வந்தார் என்று சங்கீதம் 78: 70-72 வசனங்கள் கூறுகிறது. தாவீது அவைகளை நேசித்ததினால், முழு மனதோடு அந்த ஆடுகளை அவர் பராமரித்தார். அதுபோல தேவன் இஸ்ரயேலை அதிகமாக நேசித்ததினால் தாவீதைப் போல ஒரு மனுஷனை அவர்களுக்கு இராஜவாக தெரிந்துகொண்டார் - தேவன் இஸ்ரயேலரை நேசிப்பதுபோல, இஸ்ரயேலை நேசிக்கக்கூடியவரை ஒரு தலைவராக்கினார்.

தேவன் இஸ்ரயேல்மேல் முழு விசுவாசம் கொண்டிருந்தாலும், தேவனிடத்தில் இஸ்ரயேல் ஜனங்கள் விசுவாசமாக இருப்பதற்குக் கடினமாக இருந்தது. தேவன் எகிப்திலிருந்து அற்புதமான விடுதலைத் தந்து, பசியிலிருந்தும், ஓரேப் பர்வதத்தின் சர்ப்பங்களிலிருந்தும் பாதுகாப்பைத் தந்தார் என்று மோசே இஸ்ரயேல் ஜனங்களுக்கு உபாகமம் 9-ஆம் அதிகாரத்தில் கூறுகிறார். நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒரு தனித்துவமான ஐக்கியத்தையும் தந்தார். ஆனாலும் நீங்கள் தொடர்ந்து அவருக்குக் கீழ்ப்படியாமல், நம்பாமல்

முரட்டாட்டம் செய்தீர்கள். இவ்விடத்தில் உங்களை அழித்துப் போடுவது நியாயமான காரியம். ஆயினும் நான் உங்களுக்காக பரிந்துப் பேசினேன். "பலத்த கரத்தினால் எகிப்திலிருந்து மீட்டு வந்த உங்களை வனாந்தரத்தில் அழித்துப் போடுவது உங்களுக்கு அவமானமாக இருக்கும் என்று நான் தேவனிடம் கூறினேன். உங்கள்மேல் அவர் அளவற்ற இரக்கத்தையும் கிருபையையும் வைத்தபின், உங்களை அழித்துப் போடுவது அவமானத்தை அல்லவா தரும் என்று நான் கூறினேன். ஆம். அவர்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்களாக இருந்தாலும் அவர்கள் உம்முடையவர்கள். அவர்களிடமுள்ள விசுவாச குறைவுக்கு ஏற்றவாறு செயல்படாமல் அவர்கள் பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு உங்கள்மேல் வைத்திருந்த அளவுகடந்த விசுவசத்திற்கேற்றபடி செயல்படுங்கள் என்று மோசே இஸ்ரயேலர்களிடம் உபாகமம் 9-ஆம் அதிகாரத்தில் கூறினார்.

"இப்பொழுது நீ போய், நான் உனக்குச் சொன்ன இடத்துக்கு ஜனங்களை அழைத்துக்கொண்டுபோ; என் தூதனானவர் உனக்குமுன் செல்லுவார்; ஆகிலும், நான் விசாரிக்கும் நாளில் அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன் என்று" (யாத்திராகமம் 32:14) சொல்லப்பட்டது போல அவர்களின் பாவத்திற்காக ஜனங்கள் அழிக்கப்பட வேண்டும் என்று நீதி கூறுகிறது. ஆயினும், இரட்சகரை அடையாளப்படுத்தும் மோசே, தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதற்கு, ஜனங்களின் சார்பாக தேவனிடத்தில் மோசே பரிந்து பேசினார்.

ஆகவே இஸ்ரயேலர்கள் முழுமையாக அழிக்கப்படாமல் போனாலும் அவர்கள் தண்டனைக்கு தப்பவில்லை "உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய்த் தண்டிப்பேன்" (எரேமியா 30:11). தேவன் அவர்கள்மேல் வைத்த அளவற்ற அன்பினால் அவருடைய ஜனங்களைத் தண்டித்து திருத்துவதற்கு விருப்பமுள்ளவராக இருந்தார். "தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச்சிட்சிக்கிறார்" (நீதிமொழிகள் 3:12).

"நீங்கள் கீழ்ப்படியாமல் இருந்தால் நான் உங்களைத் தண்டிப்பேன். ஆனால் உங்களுடைய கீழ்ப்படியாமை எனக்குள் அவிசுவாசத்தை ஏற்படுத்தாது. நான் உங்களுக்குக்கொடுத்த வாக்குத்தத்தத்தை நான் காத்துக்கொள்வேன்" என்று தேவன் இஸ்ரயேலிடம் கூறுகிறார் (சங்கீதம் 89:28-37). இதே கோட்பாட்டை அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 11:25-29-ஆம் வசனங்களிலும் கூறுகிறார். தேவன் மாம்ச இஸ்ரயேலிடம் ஏற்படுத்தின வாக்குத்தத்தம் நிச்சயமானது, உறுதியானது.

யாக்கோபின் பிள்ளைகள் இந்தப் பூமியின் தூளைப் போல் இருப்பார்கள் என்றும், யாக்கோபின் பிள்ளைகளின் (இஸ்ரயேல்) வழியாக, தேவன் பூமியின் எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிப்பார் என்றும் தேவன் யாக்கோபினிடம் வாக்குத்தத்தம் செய்தார் (ஆதியாகமம் 28:14). இது உயிர்த்தெழுதல், சீர்பொருந்தப்பட்ட இஸ்ரயேல் தேசம், ஆபிரகாமின் மாம்ச சந்ததியின் வழியாக தேவனுடைய இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் இந்த முழு உலகத்தையும் சேரும் நேரத்தை விவரிக்கிறது.

**புது சிருஷ்டி**

தேவனுடைய சுதந்தரத்தின் மற்றொரு பங்கு - ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாகிய புது சிருஷ்டியாகும். ஒவ்வொரு புது சிருஷ்டியும், தேவனுடைய சொத்தாக மாறுகிறது. "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17). இந்தச் சுவிசேஷ யுகத்தில், "அவருடைய நாமத்திற்கான ஜனங்களைத்" தேடி, "இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு" வரவழைத்துக் கொண்டிருக்கிறார் (அப்போஸ்தலர் 15:14; 1பேதுரு 2:9-10). இவர்கள், "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாரும், இராஜரிகமான ஆசாரிய கூட்டமும், பரிசுத்த ஜாதியுமாகவும் அவருக்குச் சொந்த ஜனமாகவும் இருக்கிறார்கள்"

"சொந்த ஜனங்கள்" என்று 1பேதுரு 2:9-ஆம் வசனத்தில் மொழிபெயர்க்கப்பட்ட அதே கிரேக்க வார்த்தை, எபேசியர் 1:14-ஆம் வசனத்தில், "விலைக்கு வாங்கப்பட்ட சொத்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புது சிருஷ்டிகள் தேவனுடைய சொத்தின் பங்காகின்றனர் என்பதை இக்காரியம் வலியுறுத்துகிறது - அவருடைய நித்தியமான சுதந்தரம். "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1 கொரிந்தியர் 6:20).

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்களுக்கு, தேவனுடைய புத்திரர்களாகும்படிக்கு அதிகாரம்

கொடுக்கப்படுகிறது. இஸ்ரயேலைப் போல, தேவனுடைய சோதனைகளையும், திருத்து தலுக்கும், குணங்கள் செதுக்கப் படுவதற்கும், புது சிருஷ்டிகளும் ஆசீர் பெற்றுள்ளனர். "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்" (எபிரெயர் 12:6). புது சிருஷ்டியின் வாழ்க்கை அனுபவத்தில் உபத்திரவம் ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட பகுதியாக உள்ளது. உபத்திரவங்கள், பொறுமையை உருவாக்கும், இது அனுபவங்களுக்குள் வழி நடத்துகிறது. இவையே, நல்ல குணங்களுக்கான ஆதாரங்களாக அமைகிறது. அனுபவங்கள் நம்பிக்கைக்கு வழிநடத்தும் - உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தத்தின்மேல் ஒரு உறுதியானதும், மகிழ்ச்சியுமான நம்பிக்கையாகும். இவ்விதமான நம்பிக்கை, ஒருமுறை ஸ்தாபிக்கப்பட்ட பின் அதை இழக்க வாய்ப்பில்லை (ரோமர் 5:3-5).

புது சிருஷ்டியின் ஒவ்வொரு நபரும், பூமியின் எல்லா குடும்பங்களிலிருந்தும், தேவன் தாமே அவருடைய கரத்தினால் பிரித்தெடுத்துள்ளார். தேவன் ஒருவரை இழுத்துக்கொள்ளாவிட்டால் ஒருவரும் இயேசுவிடம் வர இயலாது (யோவான் 6:44). இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றக் கூடிய சீஷர்களாக தேவனால் இழுக்கப்படும் காரியமானது, தகதியற்ற சிறப்புரிமையாகும் என்பதை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தேவனால் அழைக்கப்பட்டதைப் புரிந்துகொண்டு வாழ்க்கை முழுவதும் இயேசுவைப் பின்பற்றுவதற்கான சிறப்புரிமை சொற்களுக்குள் அடங்காத ஒரு சிறப்புரிமையாகும். புது சிருஷ்டியின் ஒவ்வொரு தனிப்பட்ட நபரையும் தேவன் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளும் காரியமானது, ஒவ்வொரு தனிப்பட்ட நபரோடும் தேவன் ஒரு விசேஷித்த நித்தியமான தொடர்பை வைத்துக்கொள்வதற்கு அவர் விருப்பமுள்ளவராக இருக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது.

தன்னுடைய குமாரனாகிய ஈசாக்குக்கு ஒரு மனைவியைத் தேடும்படி ஆபிரகாம் நம்பிக்கைக் குரிய ஊழியக்காரனை அனுப்பிய போது, ஆபிரகாம், பிதாவையும், ஈசாக்கு கிறிஸ்துவையும் சித்தரித்தனர். அதுபோல, நேசிக்கப்பட்ட குமாரனுக்கு மணவாட்டியாக இருப்பதற்கு ஏற்றவர்களை தேவன் தேர்வு செய்துகொண்டிருக்கிறார். தம்முடைய குமாரன் உயர்குணமுள்ள ஒரு பெண்ணை திருமணம் செய்வதை காண்பதே ஒரு தந்தையின் வாழ்க்கையில், ஆசீர்வதிக்கப்பட்ட சிறந்த சம்பவமாகும். எல்லாம் முடிந்தப் பின் விசுவாசமுள்ள, உயிர்ப்பிக்கப்பட்ட சபை மற்றும் இவர்களால் மனநிறைவடைந்த தேவனுக்கு நேசிக்கப்பட்ட மறுமகளாக இருப்பார்கள் - அவருடைய நித்திய சுதந்தரத்தின் ஒரு மகிழ்ச்சியான பகுதி.

தேவன் தம்முடைய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வார் என்ற வாக்குத்தத்தம் என்பதற்கு, சகல காரியங்களின் முடிவு நன்மைக்கேதுவாகவே இருக்கும் என்பதே பொருளாகும். ஒவ்வொரு நொறுங்குண்ட இருதயமும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய சமாதானமும் பாதுகாப்பான இருப்பிடத்தை கண்டடைவார்கள். நித்தியமான நீதியையும், சமாதானத்தையும், தேவன் சிருஷ்டித்த சகல சிருஷ்டிகளும் அவரோடு இசைந்திருப்பதற்கு, தேவனுடைய ஞானம் வல்லமை, நீதி மற்றும் அன்பு உத்திரவாதம் அளிக்கும். ஆம். இது தேவனுடைய சுதந்தரம்.

**தீர்க்கதரிசனத்தில் இன்று**

# ஈரான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள்

"இதோ, உம்முடைய சத்துருக்கள் கொந்தளித்து, உம்முடைய பகைஞர் தலையெடுக்கிறார்கள். உமது ஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசித்து, உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஆலோசனைபண்ணுகிறார்கள். அவர்கள் இனி ஒரு ஜாதியாராயிராமலும், இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக, அவர்களை அதம்பண்ணுவோம் வாருங்கள் என்கிறார்கள்." சங்கீதம் 83:2-4

யூத ஜனங்கள் நாடு கடத்தப்பட்டு, பாபிலோனில் வசித்தபோது, யோகோவா தேவன் உபயோகப்படுத்திய அரசர் கோரேஸ் என்பவர் தான் பெர்சிய பேரரசை ஸ்தாபித்தவர். பெர்சிய பேரரசின் வல்லமையையும், செல்வாக்கையும் தானியேலின் புஸ்தகம் வெளிப்படுத்துகிறது.

மக்களாட்சி பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவராய் இருக்கும் கிலெங்போர்டு மே என்பவர் தனது கட்டுரையான "Satrapy Fishing in Yemen"-இல், பெர்சிய பேரரசை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈரான் உள்ளது என்று கூறுகிறது. சௌதி அரேபியா, ஏப்ரல் 21-ஆம் தேதி தனது செயல்முறைகளை முடித்துவிட்டது என்ற அறிவிப்பு கொடுத்த பிறகு தான், ஏமெனில் சமீப காலமாக நடந்து கொண்டிருந்த சக்கரவிலிருந்து ஒரு போர் நிறுத்தம் ஏற்பட்டது. மே என்ன யோசிக்கிறார் என்றால், தனது இலக்கான வல்லரசு நிலையை அடையும் நோக்குடன் முன்னேறி செல்லும் இந்த நேரத்தில் ஏமெனை பயன்படுத்தி சச்சரவை உண்டாக்கியது என்று கருதுகிறார். மேயின் பிரகாரம் இரண்டு உலகத் தலைவர்கள் மட்டுமே ஈரானின் உண்மையான உள்நோக்கம் என்ன என்பதை கண்டுபிடித்துள்ளனர். இஸ்ரயேலின் பிரதம மந்திரியான பென்ஜமின் நெட்டன்யாகு மற்றும் சௌதி அரபியா அரசர் சல்மான், அணு ஆற்றலில் ஈரான் நடத்திய ஒப்பந்தம் பேச நம்பத்தக்கதல்ல என்று இஸ்ரயேல் நினைப்பதும் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயமே. மேலும் ஈரான் வைத்திருக்கும் அணு ஆயுதங்களை எந்தவித தயக்கமுமின்றி இஸ்ரயேலை தாக்குவார்கள் என்ற அச்சம் இஸ்ரயேலருக்கு உள்ளது. ஆனாலும் அரசாட்சியை ஆதாயமாக்கிக்கொள்ள பல முயற்சிகள் மூலம் சௌதி அரேபியாவின் பொருளாதார சூழ்நிலையை ஈரான் அச்சுறுத்திக்கொண்டே இருக்கிறது.

சௌதி அரேபியாவின் மேற்கில் செங்கடல் மட்டுமே இருப்பதால், அவர்கள் வைத்திருக்கும் எண்ணெய் மற்றும் வாயு இருப்புகளின் களஞ்சியம் 24 மைல் அகலமான ஹார்முஜ் கால்வாயை நம்பி உள்ளது. ஈரானின் தலைவர்கள் அந்த ஹார்முஜ் கால்வாயை தங்கள் நீரின் எல்லை பகுதி என்று தொடர்ந்து உரிமை கோரி கொண்டே இருக்கின்றன. ஏமெனின் மேற்கு கடலோர பகுதியில் இருக்கும் த - பாப் - அட்மண்டப் செங்கடல் மற்றும் மத்திய தரை கடலுக்குச் செல்லும் ஒரு நுழைவாயிலாக துணைபுரிகிறது. சானா என்னும் இடத்தை ஹொதிஸ், கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, அதன் சாவியை டெஹரானிடம் ஒப்படைத்தார்கள்.

இதனால், மத்திய கிழக்கு நாட்டிலுள்ள நீர் நிலைகளுக்கு ஈரான் ஒரு வாயிற்காப்பாளனாக திகழ்கிறது. ஆகையால் இந்த நாடுகளிலிருந்து ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்குச் செல்லும் எண்ணெய்களுக்கு ஈரான் ஒரு அடைப்பாகவே உள்ளது.

**ஈரான் மட்டுமே பிரச்சனை அல்ல**

ஈரான், இஸ்லாம் குடியரசிற்கும், ஈராக்கின் குடியரசிற்கும் இடையே நடந்த போர், செப்டெம்பர் மாதம் 1980-லிருந்து ஆகஸ்டு மாதம் 1988-ஆம் வருடம் வரைக்கும் நடந்தேறியதால், இந்த 20-ஆம் நூற்றாண்டில், நடந்தேறிய மிக வல்லமையான மரபு வாய்ந்த போர் எனப்படுகிறது. ஒரு இலட்சத்திற்கு மேலான படைவீரர் இதனால் மரித்தார்கள். இந்தப் போர் முடிந்தாலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அமைதி கிடைக்கவில்லை. சமய பிரிவுகள், இனவேறுபாடு, அரசியல் விரோதம் மற்றும் தீவிரவாதம் போன்ற பல பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டுள்ளது.

2010-ஆம் ஆண்டு இறுதியில் அரபு நாடுகளில் மக்கள் புரட்சி செய்கையில், ஒபாமா அரசாங்கம், அமெரிக்காவின் நண்பனும் எகிப்திய பிரதமருமான ஹோசினி முபாரக்கை பதவியிலிருந்து கீழே இறங்கும்படி வற்புறுத்தியது. நான்கு வருடங்களுக்குப் பின்னரும், மத்திய கிழக்கு நாடுகள் மக்களாட்சியின் கட்டுபாட்டிற்குள் வர இயலவில்லை. லிபியா மற்றும் சிரியா போன்ற சில நாடுகளில் அமைதியான கலவரமாக துவங்கினாலும் அது பலரின் இரத்தம் சிந்தும் தேர்தலின் மூலம் அரசாங்கம் அமைந்திருந்தாலும் ஒரு வருடத்திற்குள்ளே பொது மக்களின் புரட்சியால் அது இராணுவ ஆட்சியாக மாறிவிட்டது. ஒசாமா பின்லாடென் இறந்து மூன்றரை வருடத்திற்கு பிறகு, ஜிஹாடிஸ் அந்த மண்டலங்களில் மீண்டும் எழுந்துள்ளனர்.

(Patriot system built by Raytheon Co and the Terminal High-Altitude Area Defence (THAAD) system built by Lockheed Martin Corp) ஆகிய அமெரிக்காவின் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை வளைகுடா நாடுகள் வாங்கியுள்ளனர். செல்வாக்கிற்காகவும், ஆட்சியுரிமைக்காகவும் அந்த மண்டலங்களில் இருக்கும் இரண்டு மிக பேராவல்கொண்ட ஈரானில் இருக்கும் நாடுகளான, சௌதி, மற்றும் ஐயாட்டோலாஹ சண்டையிட்டுக்கொள்கின்றனர்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு மேற்கத்திய ஆட்சிகள் சமத்திய பாதையிலிருந்து, இப்பொழுது மத்திய கிழக்கு ~~நாடுகள் வேறு வித்தியாசமான வடிவத்தை எடுத்துள்ளனர். அந்த முழு கண்டத்திலுள்ள எல்லைகளில் உறவுகள் எல்லாம்~~

வெடிக்கும் மற்றும் உடையும் தருவாயில் தான் உள்ளது. மிகப் பெரிய பிரிவுகள் சௌதி அரேபியா (சூனி) மற்றும் ஈரான் (ஷைட்ஸ்) இடையே உள்ளது. மேலும் (சூனி) மற்றும் ஈராக் (முன்னால் சாதோம் ஹூசேன் போன்றல்லாமல் அதிலிருக்கும் பெரும்பாலனான ஜனத்தொகை ஷைட்ஸ்) இதன் அர்த்தம் என்ன?

### இஸ்ரயேலின் இக்கட்டான சூழ்நிலை

மார்சு 31-2015-இல், டைம்ஸ் ஆப் இஸ்ரயேல் என்ற பத்திரிகையில் பேசிஜ் மிலிட்டியாவைச் சேர்ந்த படைத்தலைவர் நாக்கூடி என்பவர், "இஸ்ரயேலை வரைபடத்திலிருந்து அழிக்க வேண்டும்" என்ற அவர்கள் வார்த்தைகள் ஒத்துக்கொள்ள முடியாத ஒன்று. நாக்குடி மீண்டும் கூறுகையில், "ஈரான் பாலஸ்தீனா மக்களுடன் சேர்ந்து இஸ்ரயேலை அழிக்க பல முயற்சிகள் எடுப்பதாகக் கூறினார். மேலும் இந்த முயற்சிகளெல்லாம் இஸ்ரயேலை அழிவின் பாதைக்குக்கொண்டுச் செல்லும் என்றார். இவற்றை எல்லாம். பாரோ என்ற ஈரானின் செய்தி நிறுவனம் கூறியவை.

ஒரு நாள் வரும், அப்பொழுது பல நாடுகள் இணைந்து இஸ்ரயேலுக்கு எதிராக எழும்பும், அதன் இறுதியில் அந்த நாடுகள் யோசபாத் பள்ளத்தாக்கிற்குக்கொண்டு வரப்படும் என்கிறார் யோயேல் தீர்க்கதிரிசி. அந்த நாடுகளில் முக்கியமான நாடாக பெர்சியா இருக்கும் என்கிறார் எசேக்கியேல் தீர்க்கதரிசி (எசேக்கியேல் 38:5). எசேக்கியேல் காலத்தில் பெர்சியா ஒரு முக்கியமான நாடாக வளர்ந்துக்கொண்டிருந்ததால், அவர் சுவிசேஷ யுகத்தில் நடைப்பெற போகும் இறுதி போரான அர்மெகதோனைப் பற்றி கூறியிருக்கலாம். இதற்குத் தொடர்பாகவே இஸ்ரயேல் ஜனாதிபதி நெட்டானியாகு, ஈரான் தற்சமயம் அணு ஆய்வு முன்னேற்றத்தைக்குறித்து பேசும் பேச்செல்லாம் வளைகுடா மற்றும் முழு உலகிற்குமே அச்சுறுத்துவதாக உள்ளது. உலகின் பார்வை மீண்டும் மத்திய கிழக்கு நாடுகள் மீது பதிந்துள்ளது.

ஆபிரகாம் மற்றும் அவர் சந்ததிக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டில் மீண்டும் இஸ்ரயேல் மக்கள் நிலைநாட்டி குடியேறுகின்றனர் என்பது வேதாகமத்தில் குறிப்பிடப்படும் இறுதி காலத்தினைப் பற்றிய ஒரு முக்கியமான நிகழ்வாகும் (லூக்கா 21:24). ஆபிரகாமிற்கு முதலில் அறிவிக்கப்பட்ட வாக்கு இவ்வாறு கூறுகிறது. "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதியாகமம் 12:1-3)

கிபி 70-இல் இஸ்ரயேல் மீண்டும் இரண்டாம் முறையாக தங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். 1800 வருடம் பல நாடுகளுக்கு இஸ்ரயேல் மக்கள் சிதறடிக்கப்பட்டனர். முதலாம் உலகப் போருக்கு முன் யூதர்களுக்கு மீண்டும் தங்கள் நாட்டிற்கு வர அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அப்பொழுது அது பாலஸ்தீன் என்று அழைக்கப்பட்டது. ஓட்டோமேன் பேரரசு தூக்கியெறியப்பட்டபோது மீண்டும் இஸ்ரயேலின் கதவு மிக அகலமாக திறந்தது. இன்று ஏறக்குறைய ஆறு மில்லியன் யூதர்கள் இஸ்ரயேலில் வாழ்கின்றனர். இதுவரை எந்த ஒரு நாடும் இவ்வாளவு நாட்களுக்குப் பின் உயிர்ப்பிக்கப்படவில்லை. இது கண்டிப்பாக யேகோவா தேவனின் கை வண்ணமே. ஆனால் அவர்களின் மீட்பின் நாட்கள் அமைதியாய் இருக்கவில்லை. இஸ்ரயேல் இதுவரை நான்கு போர்களை சந்தித்துள்ளனர். மேலும் அருகே உள்ள நாடுகளான ஈரான் போன்ற நாடுகளிலிருந்து தொடர்ந்து அச்சுறுத்தலையே அனுபவித்து வருகின்றனர்.

எசேக்கியேல் 38:39-இல், இஸ்ரயேல் இறுதியாக தாக்கப்படும் பொழுது அதனைக் காப்பாற்ற தெய்வீக ஊடுறுவல் தேவைப்படும் என்று கூறுகிறது. இந்த மீட்பு தேவனின் வல்லமையால் வரும்பொழுது, இஸ்ரயேல் மக்களும் மற்ற அனைத்து தேசங்களும் அதனை ஏற்றுக்கொள்வார்கள். இஸ்ரயேலை படையெடுத்தவர்கள் அழிந்த பின்பு எசேக்கியேல் தீர்க்கதரிசி இவ்வாறு கூறுகிறார் - "இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்" (எசேக்கியேல் 38-23).

இஸ்ரயேலின் இந்த அற்புதமான மீட்பிற்குப் பின் தான் இஸ்ரயேல் மற்றும் இந்த முழு உலகத்திற்கும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் வழிந்தோட துவங்கும். அதன் பிறகுதான் கிறிஸ்துவின் இராஜ்யம் இந்தப் பூமியல் செயல்பட துவங்கும். இஸ்ரயேலின் விவகாரம் அனைத்தையும் முழு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த பிறகு, கொஞ்சம் கொஞ்சமாய் பூமி முழுவதும் பரவி தனது கட்டுபாட்டிற்குள் கொண்டுவரும். அதன் பிறகு, இந்தப் பூமியல், தேவனின் இராஜ்யத்தின் மனித பிரதிநிதிகளாய் நம் முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இஸ்ரயேல் மக்கள் இராஜ்யத்தின் நீதியின் பிரமாணங்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் கற்றுக்கொண்டு அதனை தம் வாழ்வின் ஒரு பாகமாய் ஏற்றுக்கொள்ளும் அன்று, இந்தப் பெரிய திட்டமாயகிய மீட்பின் திட்டத்தில் முற்பிதாக்களுடன் இணைந்து செயல்பட அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்படும். மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் முழு உலகத்திற்கும் அதன் பிறகே சமாதானம் கிடைக்கும் (சகரியா 8:20-23).

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள்**, திருச்சி.